[illegible]
[illegible] 17 [illegible] 3

3L
R6ணூ211, N18GN
N 26.17.3.
210807

330

Registered No. M. 2095.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 OCT 1926
MADRAS

ஓம்

# ஞானோதயம்.

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

---

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு. எணங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

தொகுதி 17 } 1926-ஹு ஸெப்டம்பர்-மீ 11உ { பகுதி 3.

விஷயதானக்கம்.

1. யோகபாலவர்க்கம் (தெலுங்கு திவ்யஞான தீபிகை):—
(பத்திராதிபர் மொழிபெயர்ப்பு) ...49
2. பஞ்சமலர் யாத்திரை:—பத்திராதிபர். ...57
3. திருக்குறள் அறன்வலியுறுத்தல்:—மா. வெ. நெல்லையப்பாபிள்ளை. 62
4. திவ்யஞானஸாரம்:— ...63
5. மரணபயம்:—பத்திராதிபர். ...65
6. குறிப்புகளும் சமாசாரங்களும். ...67
7. பத்திரிகை வரவு. ...70
8. நாரத பக்தி ஸூத்திரங்கள். (தொடர்ச்சி)
—P. S. ராமசுப்பையர். ... 41

---

சந்தா விபரம்:—
வருஷசந்தா உள்நாடு ரூ 1—0—0. வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

பேரளம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# பத்திராதிபர் விண்ணப்பம்.

நம் தமிழ் ஜில்லாக்களிலுள்ள பிரம்மஞானக்கிளைச் சபைகளின் காரியதரிசிகளும் மற்றுமுள்ள மெம்பர்களும் இப் பத்திரிகையின் அபிவிருத்தியில் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டு, ஆங்காங்குள்ள பழய சந்தாதாரர்களை, சந்தா அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படி செய்தும், புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும் வேண்டிய உதவிகளை அளிப்பார்களென்று நம்புகிறோம். பிரம்மஞான பிரசார விஷயத்தில் அதிக சிரத்தையுள்ள லாட்ஜ் ஆர்கனைஸர்களுக்கும் குரூப் ஸெக்ரெடெரிகளுக்கும் இவ்விஷயத்தை அதிகமாய் எடுத்துரைக்க வேண்டியதில்லை. நம் சந்தா நேயர்களும் இப்பத்திரிகையைப் பரப்பும் விஷயத்தில் வேண்டிய உதவி புரிவார்களென்று பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 11வ வெளியாகி, அன்றையதினமே தபாலில் அனுப்பவேண்டிய நம் நேயர்களுக்கு, நேரில் எனங்குடி தபாலாபீஸில் போடப்படுகின்றபடியால், பத்திரிகை நம் நேயர்களுக்குச் சரிவரச்சேராவிட்டால் அதற்கு நாங்கள் காரணர்களல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

---

## ஸ்ரீமத் பகவத்கீதை.

கிரந்தசுலோகமும் தமிழ் மொழிபெயர்ப்பும். எம்மதச்சார்புமின்றி ஸர்வமத சம்மதமாயும் மூலகிரந்தத்தை அநுசரித்ததாயுமுள்ளது. பிரம்மவித்தியாமஹாஸபையின் தலைவரான டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை அநுசரித்து, எனங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. காலிகோ பைண்டுசெய்த பாக்கெட் ஸைஸ் விலை அணா 9. இன்னும் பிரம்மஞானத் தமிழ்புஸ்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்திவிலாச புஸ்தகசாலை,

எடமணல், (சீர்காழி வழி).

# ஞானோதயம்.

## பிரம்மஞான மாதாந்தப் பத்திரிகை.

| தொகுதி 17 | 1926-௵ செப்டம்பர்-௴ 11௳ | பகுதி 3. |
|---|---|---|


உ.

"சகோதரத்வப் பிரார்த்தனை."

அணுத்தோறுங் கரந்தே, நிறைந்திலகுயிரே!
ஆருயிர்தோறுங் கரந்திலங் கொளியே!
அனைத்தையும் ஒன்றாயணைக்கும் உள்ளன்பே!
நின்னுடன் தானும் ஒன்றென வுணரும்,
அத்தன்மையினால் தானும் மற்றெவரும்,
ஒன்றே யென்னு முண்மை யுணர்கவே!

## லோக பரிபாலனர்கள்.

### நம்மை எவர்கள் பரிபாலிக்கிறார்கள்?

சகல அவஸ்தைகளிலும் பிரபஞ்சவாசிகளின் யோகக்ஷேமங்களை கவனித்துக்கொண்டு, அவர்களுக்குப் பல வழிகளிலும் ஈடுபட்டிருக்கும் மஹான்கள் சிலருண்டு. இவர்களையே நமது இந்து சாஸ்திரங்கள் ஜீவன்முக்தர்களெனவும் ரிஷிகளெனவும், கிறிஸ்தவ கிரந்தங்கள் ஸாதுக்களெனவும் (Saints), பௌத்த தர்ம சாஸ்திரங்கள் சங்கமென்றும், இதர மதக் கிரந்தங்கள் இதர பெயர்களாலும் கூறுகின்றன. இவர்கள் நம்மைப்போலவே ஸ்தூல

... காப்பக நூலகம்



சரீரத்தைத் தரித்து, இப்பிரபஞ்சத்தில் நமது சமீபத்திலேயே இருக்கிறார்கள். ஆனாலும் நமக்கிருப்பதுபோல் அவர்களுக்குக் கர்ம பந்தங்களொன்றையும் இல்லை. பூர்வ ஜன்மங்களில், லோக பரிபாலனத்திற்கு இவர்கள் நிர்ணயம் செய்துகொண்டிருந்த ஸேவையினாலே, நமது ஆத்ம விகாசத்திற்குத் தடையாயிருந்து வரும் பஞ்சபூத சம்பந்தமான பௌதீக பந்தங்களெல்லாவற்றையும் இவர்கள் ஜயித்து, ஜீவன்முக்தர்களாகிய இம்மஹாபுருஷர்கள் இன்று தங்கள் பிரபஞ்ச அனுபவத்தை நமது க்ஷேமத்திற்காக விநியோகித்துக்கொண்டு, தங்கள் மார்க்கங்களில் நம்மையும்கூட நடத்திவித்து, நம்மையும் கூட தங்களைப்போல் லோக பரிபாலனர்களாகச் செய்வதற்கு சங்கற்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று இம்மஹாபுருஷர்கள், தமது காலத்தையெல்லாம் நமது க்ஷேமத்திற்காகவும், புரோவிருத்திக்காகவும் விநியோகம் செய்து வருகிறார்கள். ஜராமரணங்கள் இவர்கள் பக்கம் செல்ல பயப்படும். இச்சா மாத்திரத்தில், லோக பரிபாலனர்த்தம் தமக்கு இஷ்டமாயுள்ள பிரதேசத்திற்குச் செல்வதற்கு இவர்களுக்கு அபரிமிதமான சக்தி சம்பத்தியுண்டு. இவர்கள் எப்பொழுதும் பிரபஞ்ச விஷயங்களை கவனித்துக்கொண்டும், ஸகல ஜீவர்களுக்கும் எல்லா நேரங்களிலும் எல்லா விதங்களில் பரோக்ஷமாகவும், ஒவ்வொரு சமயம் பிரத்யக்ஷமாகவும் உதவி புரிந்துகொண்டுமிருப்பார்கள். ஆத்ம சக்தி சம்பத்தியுடையவர்கள், இம்மஹான்களை தரிசித்துப், புனிதர்களாகக் கூடும். இவ்வித தரிசன பாக்கியத்தையடைந்து புனிதர்களான பெரியோர்கள் அனேகம் பெயர் இன்றுகூட நமது மத்தியிலிருக்கிறார்கள். தங்கள் ஸேவா தர்மத்திற்கு உடன்படுவதற்கு முந்திக்கொள்ளும் சாதகர்களைப் பார்க்கின், இம்மஹாபுருஷர்களுக்கு எவ்வளவோ சந்தோஷம். அப்படிப்பட்டவர்களின் கோரிக்கைகளை நிர்விக்கினமாக நிறைவேற்றுவதற்கு ஸகல காலங்களிலும் உதவிபுரிந்துகொண்டு, அவர்களுக்கு உலக கல்யாண மஹோத்ஸவத்தில் எல்லா வழிகளிலும் அவகாசங்களைக் கொடுக்கிறார்கள்.

இவர்களையே நமது இந்து தர்ம சாஸ்திரங்கள், லோகரக்ஷகர்களென்றும், லோக பாலகர்களென்றும், அதிகார வர்க்கமென்றும் கூறுகின்றன. பிரபஞ்ச பரிபாலன பாத்தியதையெல்லாம் இவர்கள் கைக்குள் அகப்பட்டிருக்கிறதெனச் சொல்லின் அது



ஒரு பெரிதன்று. பிரஜைகளை ஸத்தர்ம மார்க்கங்களில் நடத்துவதற்கு நாயகர்களை (ராஜாக்களை) ஸமயோசிதமாய் உலகில் ஜனிக்கச் செய்வார்கள். நாயகர்கள் தங்கள் தர்ம நெறியைத் தவறவிட்டால் அவர்களைத் தொலைத்துவிடுவார்கள். பிரஜைகளின் க்ஷேமத்திற்காக அவசரங்களாயுள்ள அனேக நூதன ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பார்கள். பிரஜைகளின் ஸ்வபாவத்திற்கனுகுணமாயுள்ள ராஜ்யங்களை ஸ்தாபித்து வருவார்கள். கிரமமாய் அவைகளை நடத்துவதற்காக, ராஜீய கார்யங்களுக்கு உத்தியோகஸ்தர்களையும் நிர்ணயம் செய்துகொண்டிருப்பார்கள். விலக்கியும் விடுவார்கள். ராஜாக்கள், மந்திரிகள், ஸேனா நாயகர்கள், ராஜ்ய தந்திர நிபுணர்கள், இவர்களெல்லாம் இம்மஹாபுருஷர்களின் கையிலுள்ள சூத்திரப் பொம்மைகள். மானிடகோடியின் பரிணாமமே, இவர்கள் செய்துகொண்டிருக்கும் ஸேவை. மானிடகோடியை அக்ஞான அந்தகாரத்தினின்று இழுத்து ஞானமார்க்கத்தில் நடத்துவதும், பரதந்தரத்தினின்று ஸ்வதந்தரத்திற்கு திருப்புவதும், மரணவஸ்தையினின்று அமிதத்வத்திற்குக் கொண்டுபோய் செலுத்துவதும், இவர்கள் நிரந்தரமாய்ச் செய்துவரும் மஹா ஸேவையாகும்.

நாம் அனுதினம், ஜிக்ஞாசுக்கள், ஆன்ம வி[சாரத்தில்] ஸாதனமாய் ஜபிக்கும்.

> 𑌅𑌸𑌤𑍋 𑌮𑌾 𑌸𑌦𑍍𑌗𑌮𑌯 ।
> 𑌤𑌮𑌸𑍋 𑌮𑌾 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌗𑌮𑌯 ।
> 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌮𑌾𑌽𑌮𑍃𑌤𑌂 𑌗𑌮𑌯 ॥

[அஸத்தினின்று என்னை ஸத்திற்குச் சேர்ப்பிவியும், அந்தகாரத்தினின்று என்னை வெளிச்சத்திற்கு சேர்ப்பிவியும், மிருத்யுவினின்று என்னை அமிர்தத்வத்திற்கு நடத்துவியும்.]

—பிரஹதாரண்யோபநிஷத்.

என்னும் பிரார்த்தனை இம்மஹான்களுடைய செவிகளுக்கு மிகவும் ஆனந்தகரமாயிருக்கும். எவர்கள் இக்கோரிக்கையை வெளிப்படுத்துவார்களோ என அவர்கள் சிரத்தையோடு கேட்டுக்கொண்டிருப்பார்கள். எந்த மனிதன் ஆத்ம ஞானோதயத்தைச் சாதிப்பானோ, அப்படிப்பட்டவனைக் காணின், அவர்களுக்கு எவ்வளவோ சந்தோஷமாகவிருக்கும்.

தமிழ்நாடு ... 210801 சென்னை 600 008
RG ... NS ... AD2611.3

இம்மஹா புருஷர்கள் நமது ஸகோதரர்கள். பிரபஞ்சத்தில் ஜீவன் அனுபவிக்கவேண்டிய கஷ்ட சுகங்களை யனுபவித்தார்கள். நம்மைப்போல் இவர்கள் ஸம்ஸார பந்தங்களில் மாட்டிக்கொண்டு திகைக்காமல், அவைகளைத் தங்கள் தபோசக்தியால் சீக்கிரம் கடந்து ஸ்வதந்தரத்தை யடையப்பெற்ற மஹா தீரர்கள். காடாந்தகாரத்தில் மூழ்கி, இந்த ஜன்ம யாத்திரையில் வழியறியாதிருந்த நம்மை ஸத்வழியில் நடத்துவதற்கு, அவர்கள் தங்கள் பூர்வஜன்ம அனுபவங்களை நமது ஸேவையில் விநியோகித்துக் கொண்டு, நமக்கு ஞானோதயத்தை உண்டாக்குவதற்குத் தயாராக இருந்துள்ளவர்களானமஹரிஷிகள் இவர்கள். பிரஜாகோடிகள், தங்களை ஜேஷ்ட பிராதாக்கள் எனப் பாவித்துப் பிரேமிக்கவேண்டுமென அவர்கள் இச்சிக்கிறார்கள்.

இவர்களே தெய்வீகமான பரம குருக்கள், குருதேவர்கள். லோகஸேவாதர்மத்தில் ஜிஞ்ஞாசுக்கள் அநேகர்களை உபதேசம் செய்து பழக்குவதால் இவர்கள் பரமகுருக்களென அழைக்கப்படுவார்கள். தாங்கள் பல ஜன்மங்களில் சம்பாதித்த அனுபவங்களை அனுசரித்தும், தங்கள் தபோ சம்பத்தியை யனுசரித்தும் இந்த ஆசாரிய புங்கவர்கள், சிஷ்யர்களுக்கு ஸதா விக்ஞானம் உதயமாகச் செய்துகொண்டிருப்பார்கள். ஸம்ஸாரத்திலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களெல்லாம் இவர்களுக்குத் தெரியும். அக்கஷ்ட நிஷ்டூரங்களினின்று தங்கள் சிஷ்யர்களைத் தப்புவிக்கச் செய்துகொண்டும், லோகஸேவையில் அவர்கள் ஸர்வகாலங்களில் விழித்துக்கொண்டிருந்து செய்வதற்கு வேண்டிய சாதனசம்பத்திகளையெல்லாம் சிஷ்யகோடிக்கு அளித்துக்கொண்டுமிருப்பார்கள்.

இம் மஹான்களின் சக்தி ஸம்பத்திகளைக் குறித்துப் படிப்பவர்களுக்குச் சில சந்தேகங்கள் ஸஹஜமாய் ஜனிக்கக்கூடும். இந்த ஆசாரிய புருஷர்கள் எவர்? இவர்கள் எங்குள்ளவர்கள்? இக் கலிகாலத்தில் இவ்வளவு சக்தி ஸம்பத்து இருத்தல் முற்றிலும் பொய். எவரோ, சிலர்களால், தங்கள் ஸாதனோபாயங்களை ஜனங்கள் மெச்சுவதற்காக, கற்பிக்கப்பட்ட கற்பித புருஷர்களே ஒழிய, இவர்கள் இக்காலத்தில் வசித்திருத்தல் பொய்யென சிலர் சொல்லக்கூடும். அவ்வளவுதூரம் போவானேன்? இவர்களைப் பரிஹாஸம் செய்தவர்கள் அநேகர் உண்டு. இன்றும் இவர்களைக்



குறித்து பரிஹாசம் செய்யும் மனிதர்கள் கூட நமது பாரதீய ஸமுதாயத்திலேயே இருக்கிறார்கள். இக் கேலிபண்ணுகிறவர்களுக்கு, எல்லாம் விபரீதமாகவே பட்டுக்கொண்டிருக்கும். கிரந்தங்களிலுள்ளவைகளை அங்கீகரியார்கள். அதிலுள்ள விஷயங்கள் இன்றைக்கும் நிகழ்கின்றனவென்றும், அப்படிப்பட்டவர்களை இன்று பிரத்யக்ஷமாகப் பார்த்தவர்கள் நமக்குள்ளேயே இருக்கிறார்களென்றும்சொல்லின், அவர்களுக்கு விரஸமாயிருக்கும். மானிடபரிணமத்தில், பிரதிஜீவனும் இவ்வித கரைகளைக் கடந்தே தீரவேண்டுமென, பிரகிருததேவதை நம்மை இச்சிக்கின்றது. ஜீவனுக்கு ஆத்மா உதையமானவுடனே, தனது பூர்வ விதண்டாவாதத்திற்கும் அவிவேகத்திற்கும் பின்னர் ஜீவன் பச்சாத்தாபப்படுவான். இது காலதர்மம். காலதர்மத்தை தப்புவிக்க நமக்கு சாத்தியமா?

இம் மஹாபுருஷர்களைக் குறித்து இன்னும் கொஞ்சம் தெரிந்துகொள்வோம். இம் மஹான்கள் நம்மைப்போலொத்தவர்களே. நம்மைப்போலவே, அநேக ஜன்மங்களை யடைந்து, பிரபஞ்ச தத்துவத்தை அனுபவமூலமாய் கிரஹித்துள்ளவர்கள். நம்மைப்போல், பூர்வஜன்மங்களில், ஜீவிதயாத்திரைகளில் வெகுகஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் சந்தோஷத்துடன் பொறுமையாய் அனுபவித்து, கர்மபந்தங்களையெல்லாம் ஜயித்த ஜீவன்முக்தர்கள் இம் மஹாபுருஷர்கள். வயதிலும், அனுபவத்திலும், நம்மிலும் பெரியோர்கள். அவர்கள் எங்கோ, எந்த லோகத்திலோ உட்கார்ந்துகொண்டிருக்கும் தேவதைகளன்று. இந்த லோகத்தை ஜயித்த மானிடர்கள். ஜராமரணங்களை ஜயித்து, அமிர்தத்வத்தையடைந்த புண்ணியமூர்த்திகள். ஸத் தர்மமார்க்கத்தில் பூர்வஜன்மங்களில் காலயாத்திரையைக் கடத்தி, மோக்ஷபதவியை யடைந்த புருஷோத்தமர்கள். ஜீவன் சம்பாதிக்கவேண்டிய ஸ்வதந்தரங்கள் எல்லாவற்றையும் அடையப்பெற்ற கர்மயோகிகள். நமக்கு உதவி புரிவதற்கு நமது பக்கம் இன்றும் இவர்களிருக்கிறார்கள். எல்லா பந்தங்களையும் இவர்கள் ஜயித்தாலும், பிரேமை பாசங்களுக்கு இவர்கள் அதிசுலபமாய் ஈடுபடுவார்கள். பக்தகோடிகளைப் புனிதர்களாகச் செய்வதுவே இவர்களது ஸேவாதர்மம். இப்பொழுதுள்ள பிரபஞ்சத்தின் பரம கஷ்டஸ்திதியைத் தெரிந்துகொள்ள இஷ்டமில்லாத காரணத்தால், அவர்கள் பிரபஞ்சத்திற்குத் தென்படாமல் இருக்க நேரிட்டது. நாம் நமது ஜீவித

தர்மத்தை எப்பொழுது தெரிந்துகொள்ள குதூஹலத்துடனிருப்போமோ, அவ்வித சாதனத்திற்கு மனோவாக்கு காயங்களால் பிரயத்தனங்கள் செய்வோமோ, அப்பொழுதே இவர்கள் நமக்குத் தென்படுவார்கள். மோக்ஷமார்க்கத்திற்கு துவாரபாலகர்களாகி, அதில் பிரயாணம் செய்யும் பாட்டைசாரிகளுக்கு சகலவிதங்களிலும் ஈடுபடுவதற்கு இவர்கள் மிகவும் சித்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் இம்மார்க்கத்தில் சஞ்சாரம் செய்திருப்பமையால், இவர்களுக்கு இவற்றில் குப்தமார்க்கங்களெல்லாம் தெரியும். அனுபவிகளுக்குத் தெரியாத விஷயம் என்ன இருக்கிறது? எல்லாம் அவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலிருக்குமன்றோ! எவர்கள் மோக்ஷமார்க்கவாயிலைத் தட்டுவார்களோ, எப்பொழுது அப்படிப்பட்டவர்களை, கதவைத் திறந்து, உள்ளுக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள மஹா விசித்திரங்களையெல்லாம் காண்பிப்போமா, வென மிகவும் ஆசையோடிருக்கிறார்கள். ஆஹா! இவர்களது பிரேமை எப்படிப்பட்டதோ பாருங்கள்! உண்மையில் இவர்களே தன்னியர்கள். அவ்வித தன்னியர்களின் பாதபத்மங்களை அனுசரித்தவர்களே தன்யாத்மாக்கள்!! இவ்வித தன்னியர்களைப் பெற்ற லோகமாதாவே புண்ணிய ஆத்மா!!!

இவ்வித தியாகமூர்த்திகளின்பேரில், மஹாதாதாக்களின்பேரில், பிரஜைகள் நன்றியறிதலுடன் கூடிய பிரேமையைக் காண்பிப்பாரென, இம்மஹான்களின் தியாகத்தைத் தெரிந்துகொண்டவர்கள் எண்ணுதல் ஸஹஜம். நிற்க, பிரபஞ்சம் அவ்வித் பிரதிபல தர்மத்தைக் காண்பிப்பதற்கு பின்வாங்கக்கூடியதன்று. தங்கள் பௌதிகப் பிரபஞ்சத்தில் தென்படுகிறவர்களே மானிடர்களென நம்மவர்கள் எண்ணுவார்கள். தாங்கள் எண்ணிய குணஸ்வபாவமுடையவர்களே தமது பூஜிதைக்கு அருகமுடையவர்கள். ஆனதுபற்றியே, தங்களுக்கு இஷ்டம் வந்தவர்களை விசேஷமாய்ப் பிரேமிப்பார்கள். தங்களுக்குப் பிடிக்காதவர்களோடு கலகம்செய்துகொண்டும், அவர்களைப் பலவித கஷ்டங்களுக்கு உள்ளாக்குவதற்கும் யத்தனிப்பார்கள். தங்கள் குணங்களுக்கு மிஞ்சிய சிரேஷ்டகுணமுடையவர்கள் இருக்கிறார்களெனச்சொல்லின் சிரிப்பார்கள். பரிஹாஸம் செய்வார்கள். எவர்களுடைய பயித்தியம் அவர்களுக்கு ஆனந்தமன்றோ! தம்மைவிட எல்லா விதங்களிலும் மேலாயுள்ளவர்கள் தம்மில் இருக்கின் அவர்களுக்கு மானிடகோடி



கள் எவ்விதம் பூஜிதையைக் கொடுக்கின்றனவோ அதை நாம் அனுதினமும் கண்ணாரப் பார்க்கின்றோமன்றோ! அப்படிக்காயின், இந்த பௌதீக பந்தங்களை சரிவர அறுத்துக்கொண்டு, முக்தர்களான மஹான்களின் பால் அனுதரணையை மனிதர்கள் காண்பிக்கிறார்களெனின் ஒரு விந்தையன்று. ஒவ்வொருதடவை இவ்வித மஹா மூர்த்திகள், தங்கள் மத்தியில் அவதரித்து, தங்களுக்கு ஸேவைசெய்யக்கூடிய அதிர்ஷ்டம் ஸம்பவிக்கின், அவர்களை ஜனங்கள் கேலிசெய்வார்கள். அவர்கள் செய்யும் வேலை மோசமுள்ளவைகளென்றும், ஸ்வப்பிரயோஜனமுள்ளவைகளென்றும், இல்லாததும் பொல்லாததுமான நிந்தைகளைப் பிரயோகம் செய்வதில் நம்மவர்களுக்குள்ள விவேகம் தெளிவு அபரிமிதங்கள். அவதார மூர்த்திகளான, ஸ்ரீ கிருஷ்ணனை, ஸ்ரீராமனை, புத்தபகவானை, கிறிஸ்துவை, முஹம்மது நபியை, அவமானப்படுத்திய இம்மானிடகோடிகளுக்கு, இம்மஹரிஷிகளின்பேரில் நிந்தையைச்சுமத்துதல்ஒரு கஷ்டமானவேலையா? அவ்வித மஹரிஷிகள், ஆசாரிய புங்கவர்கள் தங்கள் சொந்த ஸ்வரூபங்களைச் சிறிதுகாலம் விட்டுவிட்டு, நம்மை உத்தாரணம் செய்வதற்கு, நம்மில் அவதரிக்கின், அவர்களை உலகம் பலவாறு ஹிம்ஸை செய்துவரும். கிறீஸ்து பகவான் ஜீஸஸினிடம் அவதரித்து, உலக ஸேவைசெய்வதற்கு வந்தபொழுது, அவனை அப்போதைய தேசத்துப் பிரஜைகள் எம்மாதிரி கௌரவித்தார்களோ தெரியுமன்றோ! எவர்களை உத்தாரணம் செய்யவந்தாரோ, அவர்களே அம்மஹா புருஷனைக்கொன்று, திருப்தியடைந்தார்கள். ஸாகர்டீஸ் எனும் ஞானிக்கு, விஷத்தைக்கொடுத்து உலகோர் ஸந்தோஷித்தார்கள். பகவத் ஸமாசாரத்தை உலகிற்கு எடுத்துக்காட்டவந்த பால் என்னும் பக்தனைசிரச்சேதம் செய்தார்கள். பகவத்ஸங்கீர்த்தனம் செய்துவந்த முஹம்மது நபியை, தேசத்தினின்று விரட்டியடித்தார்கள். தர்மபதத்திற்கு ஈடுபட்டவராகி உலகிற்கு நூதன விஞ்ஞானத்தை போதிப்பதற்கு அவதரித்த புரூனோ மஹானுடைய சரீரத்தை, உயிரோடே, பஸ்மம்செய்து மிகவும் திருப்தியடைந்தார்கள். வெளிப்படையாகப் பேசியவர்களை நறுக்கினோம். நமக்கு உதவிபுரிந்தவர்களை ஹிம்ஸித்தோம். நமது ஆசாரிய புருஷர்களை காலின்கீழ் போட்டு உதைத்துத் துவைத்தோம். மஹாபுருஷர்கள் அவதரிக்கின், தியாகமூர்த்திகள் உத்பவிக்கின், அவர்களை நீசர்களோடு

ஸமமாகப் பார்ப்பதற்கு இன்றைக்கும் எம்மாத்திரமேனும் பயப்படாமல் இருக்கும் இவ்வுலக குணஸ்வபாவங்களை விசேஷமாய் வர்ணித்தல் அனுவசியமன்றே!

மஹான்களையே இவ்விதம் நடத்திய பிரபஞ்சம் அவர்களைப் பின்பற்ற எண்ணும் சாதகர்களை சும்மாய்ப் போகவிடுமா? தனது ஆத்திரத்தை இவர்களிடமும் காண்பிக்க பின்வாங்காது. பகவத் மார்க்கத்தில் நடக்க இஷ்டப்பட்டவர்கள் தங்கள் குருநாதர்களைப் போல், எல்லா கஷ்டங்களையும் பொறுத்துக்கொள்வதற்கு, எல்லா நேரங்களிலும் சித்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். பிரபஞ்சசபை நமக்களிக்கும் ஸமஸ்த கஷ்டங்களையும் தைரிய ஸாஹசக்கியத்தோடு ஒறுத்துக்கொள்வதற்கு, சக்தி சம்பத்தியை யடைந்து இருந்தாலொழிய, அவர்களுடைய தர்ம மார்க்கத்தில் நடந்துகொண்டு லோக ஸேவையைச் செய்யக்கூடியவர்களாய் ஆகமாட்டோம்.

நமது அந்த விவேகத்தாலே, இவ்விஷயங்களில் எவ்வளவு ஆஸ்தீக புத்தியோடு பிரவிர்த்தித்தாலும் மோக்ஷ மார்க்கமொன்றுளது. இம்மார்க்கம் பிரபஞ்ச ஸேவைக்குச் சாதன ஹேதுவாகி, சாதகர்கள் எல்லோரையும் லோக ஸேவகர்களாகச் செய்துகொண்டிருக்கும். உலகம் இப்பாட்டைசாரிகளுக்கு எவ்வளவு தடைகள் நேரச்செய்துகொண்டிருக்கினும், அவர்கள் எல்லாக் கஷ்டங்களையும் அதி தைரிய ஸாமர்த்தியங்களாலே தாங்கி, தாங்களடைய வேண்டிய ஸ்தானத்தை அதி சுலபமாய்ச் சேர்வதற்கு எல்லா அவகாசங்களுமுண்டு. நமக்குக் கோசரமாகாத இம்மார்க்கத்தில் பிரயாணம் செய்பவர்களே "ஸர்வகலா பரிபூரணனான ராஜாதிராஜனை" அடைந்து புனிதர்களாவார்கள். நமது பூர்விகர்கள் இப்பதத்தை யனுசரித்தே லோக ஸேவகர்களானார்கள். இன்னும் அநேகர்கள் இந்த தர்ம மார்க்கத்தில் சஞ்சாரம் செய்துகொண்டு கிருத கிருத்தியர்களாய் ஆகிவருகிறார்கள். இனிமேல் கூட லக்ஷக்கணக்கான சாதகர்கள் அப்புண்ணிய மார்க்கத்தில் தங்கள் ஜீவயாத்திரைகளை நடத்திக்கொண்டு, உலக பரிபாலனர்களாவார்கள். மனிதனுக்கு அசாத்தியமான காரியம் என்ன இருக்கிறது? அதில் தனது ஜீவ்யத்தின் பரம முடிவைக் கிரகித்தவனுடைய புண்ணியமே புண்ணியம்.



பகவானுடைய நிரந்தரமான கருணை அலைகளாலே உலகம் இந்த தர்மமார்க்கத்தையனுசரித்து கீர்த்தியுள்ளதாய் ஆகுக.

ஓம் ஸர்வேபி ஸுகிநஸ்ஸந்து ஸர்வே ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பச்யந்து மாகச்சித் து:கபாக்பவேத்॥

(இவ்விஷயம் தெலுங்கு திவ்யஞான தீபிகையினின்று பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.)

---

## பஞ்சமஹா யக்ஞம்.
## ரிஷியக்ஞம் அல்லது ஞானயக்ஞம்.

47-ம் பக்கத் தொடர்ச்சி,

ஞான நூலின் பெருமையை ஸாமான்ய மனிதர்கள் அறியார்கள். அது அவர்களுக்கு அலக்ஷியமாகக்கூடத் தோன்றும். தங்களுக்குத் தாங்களே ஞானத்தைத் தெரிந்துகொள்ளக் கூடாதாவென்ற கெர்வமும் ஏற்படலாம். அப்படித் தெரிந்துகொள்ளுதல் மிகவும் கஷ்டமாகும். சில சமயம் பிராணனுக்கே ஆபத்து நேரினும் நேரலாம். ரஸாயன சாஸ்திரத்தைக் கண்டுபிடித்த ரோஜர்பேகன் என்பவர் எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளாகி அந்த சாஸ்திரத்தைக் கண்டுபிடித்தார். சில ஸமயங்களில் சோதனாலங்களில் ஏற்பட்ட மருந்துகளின் வெடி அதிர்ச்சி முதலியவைகளால், கை கண் முதலிய அவயவங்கள் பங்கப்படும்படி நேர்ந்தன. அவ்வளவு அவர் தான் பலவித கஷ்டங்களுக்குள்ளாகி அனுபவத்தால் தெளிவாய் சாஸ்திரம் எழுதிவைத்திருந்தும், இக்காலம் கலாசாலைகளில் சாஸ்திர உபாத்தியாயர்களின் உதவி பக்கத்திலிருந்தும், அநேக மாணாக்கர்கள் ரஸாயன சோதனாலங்களில் அபாயங்களுக்கு உள்ளாகி விடுகிறார்கள். சில ஸமயம் உபாத்தியாயர்களே அவ்வித அபாயத்திற்கு உள்ளாகி விடுகிறார்கள் என்றால், ஞானமார்க்கம் மாத்திரம் அவ்வளவு சுலபமானதா? சுலபமென நினைப்பது விசாரணைசெய்யாத குற்றமாகும். ஆகையால் இம்மார்க்கத்தில் தக்க உதவியின்றி மேல் செல்லமுடியாது. இப்பொழுது பெரியோர்களாய் அல்லது மஹான்களாய் இருக்கப்பட்டவர்கள் நம்மைப்போல் ஸம்ஸாரசக்கரத்தில் சுழன்று திரிந்தவர்களே. அவர்கள் மிக்கவாறும் கஷ்டப்பட்டு அவர்களுக்கு தங்கள் முன்னோர் காட்டிய நூல் வழிசென்று ஸம்ஸாரக்கடலைக்கடந்து மேல் சென்றவர்கள். மேற்சென்றாலும் அவர்கள் கீழே நோக்கும்பொழுது ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் ஸஹோதர ஜீவர்

களைப்பார்த்துக் கருணையால் தங்களுடைய அனுபவங்களை நூலாக எழுதிவைத்து, தாங்களும் தோற்றாத்துணைவர்களாயிருந்துவருகிறார்கள். ஆகையால் மூத்தோர்களுடைய முதுமொழியை நாம் கைப்பற்றாவிடில், ரோஜர்பேகனாவது பலகஷ்டங்களுக்கு உள்ளாகியாவது ரஸாயன சாஸ்திரத்தைக் கண்டுபிடித்தார். நமக்கோ முதலில் சொல்லியது நிச்சயமே. இரண்டாவதாகச்சொல்லியது சந்தேகமேயாம். ஏனெனில், மார்க்கம் அவ்வளவு கஷ்டமானது. இதைத்தான், வேதங்களில் ரிஷிகள் கத்திமுனையைப்போலொத்த மார்க்கமென்றும், தாயுமானஸ்வாமிகள், 'கீழேநெருப்பாறு, மேலே மயிர்ப்பாலம்போலொத்தமார்க்கம்' என்றும், கிறிஸ்துவானவர், 'மார்க்கவாயில் ஒடுக்கமானது, மார்க்கம் குறுகியது' என்றும் சொல்லியிருக்கிறார்கள். நாமோ கஷ்டப்பட்டாவது மஹான்களுடையவும் ஞான நூல்களினுடையவும் உதவியைக்கொண்டு அரிதான மானிட ஜன்மத்திற்குரித்தான ஞானத்தை அபிவிருத்திசெய்துகொண்டு, நாமும் உலகிற்குத் துணைவர்களாயிருக்கப் பிரியப்படுகிறோமில்லை. ஸம்ஸாரத்தையே பரமசுகமாக பாவித்து அதற்குள்ளேயே மூழ்கிவிடுகின்றோம். அப்படிப்பட்ட நம்மை யாருக்கு உவமையாகச் சொல்லலாமெனின், ஒருவன் ஓர் காட்டின் வழிசென்றுகொண்டிருந்தபொழுது, வெகு நாட்களாய் பசியால் வருந்திக்கொண்டிருந்த ஓர் புலி இவனைத் துறத்த, இவன் தனக்கு எதிரில் அகப்பட்ட ஓர் ஜலம் வற்றிய பாழ்கிணற்றுக்குள் ஓடி இறங்கினான். கிணற்றின் அடிவாரத்தில் கருநாகமொன்று குடியிருந்தது. பாபம் இவன் என்னசெய்வான்! கிணற்றின் அடியில் இறங்காமல், மத்தியில் கற்களின் இடைகளில் பாதங்களை நுழைத்துவைத்துக்கொண்டு, கீழே விழாதபடி, கற்களின் இடுக்குகளில் முளைத்திருந்த ஓர் சிறுகொடியை கைகளால் பிடித்துக்கொண்டு, மஹாகஷ்டத்துடன் மேலே வரமுடியாமலும் கீழே போகமுடியாமலும் தவித்துக்கொண்டிருக்கிறான். மேலே சென்றாலோ புலிக்கு இரையாகிவிடுவான். கீழே இறங்கினாலோ கருநாகம் தீண்டி யமனுலகை அடைவான். இவ்வித ஸந்தர்ப்பத்தில் இவன் கைப்பற்றியிருந்த கொடியின்வேரை ஸமயம்பார்த்து ஓர் எலி அறுக்க ஆரம்பித்துவிட்டது. கொடி அறுந்துபோகுதல் சுவல்ப நிமிஷத்தை எதிர்பார்த்திருக்கின்றது. இவ்வித நிலைமையில் கொடியின் அசைவால் அக்கொடியை ஒட்டியுள்ள தேனீக்களின் கூட்டினின்று ஈக்கள் கலைவு



றப்பட்டு வெளிச்செல்லும்பொழுது சமீபத்தில் இருந்த இவனது முகம் முதலிய இடங்களில் பலமாய்க்கொட்டின. இந்த ஸந்தர்ப்பத்தில் தேனடையினின்று தேன்சொட்ட ஆரம்பித்தது. அதை இவன் நாவினால் ஏந்தி ருசித்து ஆனந்தித்தான். ஸம்ஸாரசுகத்தை இச்சிப்பவர்களும் இவனுக்கு ஸாக்ஷாத் ஸஹோதரர்களெனச் சொல்வதற்குத் தடையென்ன?

இனி ஞான நூல்களை எவ்விதம் படித்தலென்பதைப் பார்ப்போம். தினந்தோறும் அரைமணி நேரமாவது ஞான நூல்களைப் படிக்கும் பழக்கம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த அவகாசம் நமக்கு எவ்விதமாயாவது கிடைக்காமல்போகாது. விஷயத்தை மனதில் வாங்கி லட்சியத்தைத் தெளிவாயும் உறுதியாயும் நாட்டி வைத்துக்கொண்டால் அவசியம் அவகாசம் கிடைக்கும். அனேகருக்கு இது இருப்பதில்லை. அவர்களுடைய பிரவர்த்திகளைப் பார்க்கின் அவர்களுடைய ஸ்வயநலத்திற்கேனும் காலத்தைச் செலவழித்ததாகப் புலப்படமாட்டாது. வீண்பொழுது போக்குதலேயாகும். அரை மணிநேரம் முழுவதும் படிக்கவேண்டுமென்று நான் சொல்ல முன்வரவில்லை. அது உபயோகப்பட்ட படிப்பாகமாட்டாது. தொண்டை சேதத்தைத்தவிர வேறொரு பிரயோஜனமுமிரா. ஒரு நிமிஷம் அல்லது இரண்டு நிமிஷங்கள் ஒரு நல்ல நூலை எடுத்து ஒரு பாட்டோ அல்லது சுலோகமோ அல்லது அரைபாட்டோ அல்லது சுலோகமோ படிக்கின் போதும். அதை மிகுந்த 28 நிமிஷங்களுக்குள் மனனஞ்செய்து தெளியும் வகைக்கு முயற்சிக்கவேண்டும். தெளிந்தாலொழிய மேல்பாடம் படிக்கப்படாது. இதுவே உண்மையான படிப்பு. மேலும் தெளிந்தபடி ஒழுக முயற்சிக்கவேண்டும். இல்லையேல் அவ்வித படிப்பு எவ்வித பயனையும் கொடா. உத்தமமான விஷயங்களும் ஸ்புரிக்கமாட்டா. ஸ்வலாபத்தை உத்தேசித்துப் படிக்கப்படாது. அப்படிப்பு துர்விநியோகமேயாகும். அது தனக்கும் இதரர்களுக்கும் கெடுதியையே விளைவிக்கும். ஆனது பற்றியேதான் தாயுமானவர், "கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றும் அறிவில்லாத என்கர்மத்தை என்சொல்வேன்" என்றார். ஆகையால் ஞான நூல்களைப் படிப்பவர்கள் ஸ்வலாபபுத்தியைக் கட்டோடே விட்டொழித்து பக்திசிரத்தையுடன் பரோபகாரத்திற்காகவே படித்தல்வேண்டும். மேலே குறித்தவாறு படிக்க 24 மணி நேரங்களில் அரைமணி கிடைக்காது போகுமா? போகாது. தங்களுக்கு

அவகாசம் கிடைக்கவில்லையென்று எவரேனும் சொல்வார்களேயாயின் அது சாக்குப் போக்காகுமே ஒழிய உண்மையாகமாட்டாது. அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்பவர்களாவார்கள். அது பிறரை ஏமாற்றுவதன்று. ஒருவன் தான் காலை 6-மணி முதல் மாலை 6-மணி வரைக்கும் தனக்கு அபாரமான வேலையிருக்கிறது, படிக்க அவகாசமில்லை யென்று பிதற்றலாம். மனம் இருக்கின் வழியுண்டு. எவ்வித வேலைகளுக்கும் இடையூறின்றி இவ்விதப்படிப்பு சாத்தியமாகும். மாலை வீட்டிற்கு வந்தவுடன் தொங்கிக்குச் சேர்றிடும் முன்னாவது அல்லது உறங்கு முன்னாவது அல்லது காலையில் படுக்கையை விட்டெழுந்தவுடனாவது படித்து சிந்தித்துத் தெளியலாம். இதில் காலை நேரம் மிகவும் சிலாக்கியமானது. ஞானத்தில் சிறிது நேரம் ஊன்றியிருந்துவிட்டுப் பின்னர் தனக்கு ஏற்பட்டுள்ள வெளி வியவஹாரங்களுக்குச் செல்லின், அவ்விதம் செய்யாமல் சென்றால் எத்தனை கேடுகள் விளைவிப்பானோ அத்தனை கேடுகள் உண்டாக்கமாட்டான். காலக்கிரமத்தில் குறைந்துபோகும். நன்மைகள் விர்த்தியாகும். ஏழு வருடகாலங்கள் ஒரு குருவினிடம் உபதேசத்திற்குக் காத்துக்கொண்டிருந்த ஒருசிஷ்யனுக்கு, வாய்திறந்து ஒருசொல்லும் சொல்லாதகாரணத்தையிட்டு சிஷ்யன் அலுத்துப்போய், இனி குருவிடம் வருவதில் பிரயோஜனமில்லை என்று மனதில் நினைத்துப் புறப்பட்ட சிஷ்யனது நோக்கத்தைக் குறிப்பிட்டறிந்து, ஓர் நாள் காலையில்வரும்படி கட்டளையிட்டார். ஏழு வருஷகாலங்கள் பொறுமையாய் குரு ஸன்னிதானம்சென்று வந்துகொண்டிருந்த சிஷ்யன் ஸாமான்யமானவனா? அன்றல்லவா? இக்காலத்திய சீடர்களுக்கு அவ்விதபொறுமை ஏற்படுமா? குறிப்பிட்ட காலையில் சீடன் குருவினிடம் செல்லவே, அவர் வெகு வருடங்களாய் காத்துக்கொண்டிருந்த சிஷ்யனுக்கு பின்வருமாறு உபதேசித்தார். "நீ காலையில் உனது வேலைகளின் நிமித்தம் வெளிச்செல்லுமுன், "மரணம் நிச்சயம்" என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு பின்னர் செல்" என்றார். இது இக்காலத்திய பொறுமையற்ற சீடர்களுக்கு தத்துவம் தெரியாத காரணத்தால் விநோதமாய்த்தோன்றும். தத்துவமறிந்த உண்மையான குருவானபடியால்தான் பரமரஹஸியமான உபதேசத்தையளித்தார். இந்த எண்ணத்தை அவன்மனதில் அதிகாலையில் பதியவைத்துக்கொண்டு அவன் காரியங்களில் பிரவர்த்தித்தால் எவ்வளவு உண்மையாய் நடந்துகொள்வான். ஆன



துபற்றியே இதன் நன்மையைப்பற்றி மேலே வரையலுற்றேன். இரவு உறங்கும் முன்னும் மேலே சொல்லியவாறு படித்து சிந்தித்து அச்சிந்தனையோடேயே உறங்கிவிடின் காலையின் எழுந்தவுடன் தெளிவுண்டாகும். இதுவும் நல்ல உபாயமே. நமக்கோ அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம், இவைவேண்டியமட்டில்குடிகொண்டிருக்கின்றன. அவற்றைத்தொலைக்க உபாயம் மேலே பிரஸ்தாபித்த விதமாயுள்ள படிப்பாகும். இதைத்தான் கைவல்யத்தில்,

தடைகளே தெனிலஞ்ஞானஞ் சந்தேக விபரீதங்கள்
படர்செய்யுமந்த மூன்றும் பலஜன்மப் பழக்கத்காலே
யுடனுடன்வரும் வந்தக்காலுயர்ஞானங் கெடுமிவற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளிதலாலே.

எனக் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் இம்மார்க்கத்தில் உண்மையான குருக்களையும் ஞான நூல்களையும் கைப்பற்றல்வேண்டும். ஏனெனில், இக்காலத்தில் குருக்கள் இருவகைப்பட்டு இருக்கிறார்கள். திரவியத்தை அபகரிக்கும் குருக்கள், அஞ்ஞானத்தை அபகரிக்கும் குருக்கள் ஆக இருவகையிலிருக்கின்றனர். ஆகையால் சரியான குருவைப் பிடித்து மேல்மார்க்கத்தில்செல்ல முயற்சிக்கவேண்டும். இல்லாவிடில் வேதத்தில் சொல்லியபடி குருடன் குருடனுக்கு வழிகாட்டியதுபோலாகுமென்றும், திருமூலர் திருமந்திரத்தில் சொல்லியபடி

"குருட்டினை நீக்கும் குருவினைக்கைக்கொள்ளார்
குருட்டினை நீக்கா குருவினைக் கைக்கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டமாடிக்
குருடும் குருடும் குழிவிழுந்தவாறே,

என்றபடிக்கும் முடியும்.

ஞானயக்ஞத்தைப்பற்றி இன்னும் எவ்வளவோ விரித்து அதன் பெருமையைப் பேசினும் அவ்வளவிற்கும் இடம்தரும். ஆகையால், அதை இம்மட்டோடே சுருக்கிவிட்டேன்.

ஞானத்தைப் பரிபக்குவம் செய்யாத குற்றத்தால்தான் உலகில் இதுஸமயம் அனேக அனர்த்தங்கள் நேரிட்டிருக்கின்றன. ஆனதுபற்றியே, இந்த யக்ஞத்தைப்பற்றி இவ்வளவுதூரம் எடுத்துரைக்கும்படி நேரிட்டது. இதையார்தான் அனுஷ்டிக்கப்படாது. மானிடஜன்மமெடுத்தவர்கள் எல்லோரும் அனுஷ்டிக்கவேண்டியதே, அவ்விதம் செய்யின் மஹான்களின் அனுக்கிரஹமுண்டாகும். ஆகையால், எல்லோரும் இந்த ரிஷியக்ஞத்தை ஒழுங்காய் அனுஷ்டித்து உலகிற்கு நன்மையை அளிக்கக்கூடியதாய் மஹான்கள் ஆசீர்வதிப்பார்களாக!

(இன்னும் வரும்)

V. இராமச்சந்திர நாயுடு.

# திருக்குறள்-அறன்வலியுறுத்தல்.

——:O:——

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

பதவுரை.

| | | |
|---|---|---|
| வீழ்நாள் படாஅமை | — | செய்யாது கழியும் நாள் இல்லாமலே |
| நன்று | — | ஒருவன் புண்ணியச் செயல்களை |
| ஆற்றின் | — | செய்துகொண்டே வருவானாயின் |
| அஃது | — | அப்படிச் செய்தல் |
| வாழ்நாள்வழி | — | அவன் யாக்கையோடு கூடி உலகிற் பிறக்கும வழியை |
| அடைக்குங்கல் | — | இனி வராமல் அடைக்குங் கல்லாம். |

பொழிப்புரை.

ஒருவன் உலகில் வாழும் தன் வாழ்நாளில் ஒருநாளாவது வீணைக் கழியும் நாள் இல்லாமல் புண்ணியச் செயல்களையே யாதொரு பயனும் கருதாது செய்து வருவானாயின் அது அவன் இனிமேல் உலகில் வந்து பிறக்கும் வழியை அடைத்துவிடும்.

அதாவது அப்படிப் புண்ணியச் செயல்களைச் செய்கிறவன் இனிமேல் உலகிலிருந்து பிறக்கமாட்டா நிலையை அடைவான். இதன் கருத்து சற்று விரிக்குமிடத்து வருமாறு:—

ஒருவன் முதலாவது தன்னிடத்து பாவச் செயல்கள் ஒன்றும் நிகழாமல் அறவே அவைகளை ஒழித்தல் வேண்டும். பாவச் செயல்களை ஒழித்தலோடு அவன் புண்ணியச் செயல்களையே எப்பொழுதும் செய்துவரல் வேண்டும். இப்படி பாவம் தேய்ந்து புண்ணியம் வளர வளர அவனிடத்து அறியாமை நீங்கும்; அறியாமை நீங்க நித்திய அநித்தியப் பொருள்களின் வேறுபாட்டுணர் வுண்டாகும். நித்திய அநித்தியப் பொருள்களின் விவேகமுண்டாக அழியும்தன்மையவாகிய இம்மை மறுமையின்பங்களில் விராகமும் பிறவித் துன்பமும் அவன் மனதில் உண்டாகும். அவை உண்டாக வீட்டின்கண் ஆசையுண்டாம். வீடு அடைதலில் ஆசையுண்டாகப் பிறவிக் காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி வீடு அடைகிறதற்குக் காரணமாகிய யோக முயற்சிஉண்டாம். யோக முயற்சியுண்டாக அவனுக்கு மெய்யுணர்வு (பரஞானம்) உண்டாய் எனது என்னும் புறப்பற்றும் யான் என்னும அகப்பற்றும்நீங்கும். அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கவே அவன் பிறப்பு இறப்புநீங்கி முத்தி அடைவன்.

பிரம்மஞான சங்க நூல்கள் இந்தக்கருத்துகளை பலபட விரித்துச் சொல்கின்றன.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை,
சிந்துபூந்துறை.



41-ம் பக்கத் தொடர்ச்சி.

“ சனை: சனைருபரமேத் புத்த்யா த்ருதிக்ருஹீதயா।
ஆத்மஸம்ஸ்தம் மன: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத்॥ ”

(கீதை அத்தியாயம் 6. சுலோகம் 25.)

அதாவது, புத்தி தத்வத்தைப் பலப்படுத்தி மனஸ்ஸினிடத்துள்ள தோஷத்தைப் போக்கடிக்கவேண்டும். புத்தியின் ஸ்வபாவமென்ன? இங்கே புத்தியென்றால் “விஞ்ஞானம்” ஸாமந்யமாக அந்தஃகரணத்தில் ஒரு பாகமாகிய நிச்சயாத்மகமான புத்தி மட்டுமல்ல. நீ, நான், பிறர்கள், என்ற பின்ன பாவங்களைத் தாண்டி ஜீவர்களெல்லோரும் ஈச்வராம்சர்கள், ஆத்மஸ்வரூபர்கள் என்றும், யாரை த்வேஷித்தாலும், பாதித்தாலும், அந்த சரீரத்திலிருக்கிற ஈச்வர தத்வத்தை த்வேஷித்து பாதித்தவர்கள் ஆவோமென்றுமறிந்து எல்லாரிடத்திலும், கொஞ்சமாகிலும் ஒருவிதமான ஏகத்வத்தைப் பார்ப்பதேதான் புத்தி. இப்படிப்பட்ட பாவந்தான் “விஞ்ஞானம்” விசேஷஞானம் அநுபவத்திலுண்டான ஞானமென்று சொல்லப்படும். சாஸ்த்ரங்களில் போதிக்கப்பட்ட விஷயங்கள் அனுஷ்டானத்திற்கு வராமலிருக்கிற வரையில், அஹங்காரமும் (நான் என்பதும்) மமகாரமும் (என்னுடையது என்பதும்) உத்ரேகித்திருக்கும் (பிரபலித்திருக்கும்). என்றைக்குப் புத்தி தத்வம் தலையெடுக்குமோ, அப்போது அஹங்காரம் தலை வணங்கி, சாஸ்த்ரஞானம் தினசர்யையில் வெளியாகும். ஆதலால், ப்ரயத்ன பூர்வகமாக கொஞ்சகாலம் எல்லா மனிதர்களும் ஸஹோதரர்கள் என்ற பாவத்தை அப்யாஸம் செய்துகொண்டுவந்தால், தினந்தோறும் அந்த பாவம் ஸ்திரப்பட்டுக்கொண்டு, கடைசியில் அது ஜீவனுக்கு ஸ்வபாவமே ஆகி ப்ரகாசிக்கும். இந்த விஷயத்தை ஸ்ரீ கிருஷ்ணர் உத்தவருக்கு இம்மாதிரி போதித்தனர்.

ப்ராஹ்மணே புக்கஸே ஸ்தேனே ப்ரஹ்மண்யேऽர்கே ஸ்புலிங்ககே।
அக்ரூரே க்ரூரகே சைவ ஸமத்ருக் பண்டிதோ மத:॥
நரேஷ்வபீக்ஷ்ணம் மத்பாவம் பும்ஸோ பாவயதோऽசிராத்।
ஸ்பர்தாஸூயாதிரஸ்காரா: ஸாஹங்காரா வியந்தி ஹி॥

விஸ்ருஜ்ய ஸ்மயமாநாந் ஸ்வாந் த்ருஶம் வ்ரீடாம் ச தைஹிகீம் ।
ப்ரணமேத் தண்டவத் பூமாவாஶ்வசாண்டாலகோகரம் ॥
[illegible]
யாவத் ஸர்வேஷு பூதேஷு மத்பாவோ நோபஜாயதே ।
தாவதேவமுபாஸீத வாங்மந:காயவ்ருத்திபி: ॥

ஸ்ரீ பாகவதம். XI - xxix. 14-17.

ப்ராஹ்மணனிடத்திலும், புல்கஸனி (சண்டாளன்) டத்திலும், திருடனிடத்திலும், மிகுந்த உதாரியிடத்திலும், ஸூர்யனிடமும், மின்மினிப் பூச்சியினிடமும், பரமதயாளுவிடத்திலும், க்ரூரனிடத்திலும், ஸமமான புத்தியுள்ளவன் தான் பண்டிதன் எனப் படுவான். மனிதரெல்லோரிடத்திலும் ஈச்வரபாவம் (மத்பாவ:) உண்டானதுமே சீக்ரத்திலேயே, ஸ்பர்த்தை (பொறாமை) அஸூயை அவமதித்தலும், அஹங்காரத்துடன் கூடி நசித்துப்போகும். பரிஹாஸம் செய்யும் ஸ்வஜனங்களையும், சரீரத்துடன் பிறந்த லஜ்ஜையும்விட்டு நாய், சண்டாளன், பசு, கழுதை, இவைகளை எல்லாம் பார்த்தபோது பூமியின்மேல் விழுந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்காரங்கள் செய்யத்தகும். ஈச்வரன் ஜீவகளையாக எல்லாப் பூதங்களிலும் ப்ரவேசித்திருக்கிறானென்று, எல்லாவற்றிலும், மத்பாவம் (ஈச்வர பாவம்) உண்டாகும் வரையிலும், மனோ வாக்கு, காயங்களுடன் மேல் சொல்லிய மாதிரியாக, உபாஸனை செய்யவேண்டும்.

இப்படிச் செய்வதால் மேல்காட்டியதுபோல், மூலமாகிய அஹம்காரமும், அதனிலிருந்து பிறக்கும் ஸ்பர்தை, அஸூயை திரஸ்காரங்களும் முழுமையும் நசித்துவிடும். அப்பொழுதுதான், மனஸ்ஸில் காமம் நசித்ததென்று அர்த்தம்.

இவ்வளவு செய்தபோதிலும், இன்னமும் கொஞ்சம் காமம் ஒளிந்துகொண்டே இருக்கும்போலத் தோன்றுகின்றது. அஹங்காரத்தையும், தான் வேறென்ற பாவத்தையும் விட்டு, ஸர்வபூத ஹிதனாய் நடந்துகொள்கிறவனாகவிருந்தும், அதெல்லாம் தனக்கு மோக்ஷஸாதனமாக நினைப்பதுண்டு. தனக்கு மோக்ஷம்-கைவல்யம்-கிடைத்துவிட்டால், மற்றவர்கள் கதி எப்படியானால் என்ன? என்கிற எண்ணம் நின்றாலும் நிற்கலாம். பக்தர்களில் முதன்மையான ப்ரஹ்லாதன், ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தி, ப்ரத்யக்ஷமாய், அவனுடைய பக்தியை சிலாகித்து, வைகுண்டத்திற்கு வரும்படியழைத்தபொழுது கீழ்வருமாறு சொன்னான்;—



இன்னும் வரும்.

# மரணபயம்.

அனேக மனிதர்களுடைய மனதில் மரணபயம் பலமாய் வேரூன்றி யிருக்கிறது. இது விஷயத்தில் அனேகர் நாம் நினைக்குமளவிற்கு மிஞ்சி கஷ்டப்படுகிறார்கள். இன்னும் அனேகர் மரணத்திற்குப் பின்னரென்ன ஸம்பவிக்குமோ வென்ற பயத்தால் துன்புறுகிறார்கள். நரக விஷயமாயும், இவற்றையோ அவற்றையோ நம்பாவிடின்கண்டிப்பான தண்டனை கிடைக்குமென்ற விஷயமாயும், பலவித மனோபாவனைகள் உள்ளவர்களுக்கே ஸ்வபாவத்தில் இவ்வித பயம் ஜனிப்பதைக் காணலாம். இது மிகவும் கேவலமான மித்யாசாரம். அவர்கள் அவ்வாறு கஷ்டப்படுவது உண்மையே. இன்னும் இதைவிடக் கெடுதலென்னவெனின், இதராளுக்கு மரணத்திற்குப் பின்னரென்ன கதி நேருமோவென்ற பயமேயாம். அனேகம் தாய்மார்கள் தங்கள் ஜீவகாலம் முழுமையும் தங்கள் புத்திரர்களுக்கு என்ன நேருமோ வென்ற சந்தேகங்களாலும் பயங்களாலும் பிடிக்கப்பட்டு வருந்தி வருகின்றார்கள். ஒரு பையன் தன்தாயாரை விட்டு தூர தேசத்திற்குச் செல்வதாய் வைத்துக் கொள்வோம். அவன் உலகத்தாரின் ஸாமான்ய பழக்கங்களில்சடுபட்டு எந்த சுஷ்கமான மதபோதனைகளின் மத்தியில்வளர்ந்துவந்தானோ, அதற்கு விரோதமாக அனேக காரியங்களைச்செய்யின் அவன்நித்தியமான சித்திரவதைக்கு உட்படுவானெனத்தாய்நினைக்கிறாள். உண்மையில் நித்திய நரகமில்லாதிருக்கும்பொழுது, அவளுக்கு இவ்வுலகில் உண்மையாய் விசேஷ உபத்திரவம்தப்பாதிருக்கின்றது.

நமக்குக் கர்மசட்டமின்னதென்பது தெரியும். மரணத்திற்குப் பிந்திய ஸ்திதிகள் ஸாதாரணமாய் இப்பொழுதுள்ள ஜீவியத்தின் தொடர்ச்சி யென்றும் ஸ்தூல சரீரமில்லாவிடினும் இதர சூக்ஷ்ம சரீரங்களுடன் மேல் லோகங்களில் இருப்போமென்றும் நாம் கிரஹித்திருக்கிறோம். மேலும் நாம் ஒரு ஜன்மமென்று சொல்வதைப் பெரிதும் உண்மையுமானஜன்மத்தில் ஒரு தினமாகத் தெரிந்துகொள்வதால் அப்பால் இத்யாதி விஷயங்களிடத்துள்ள

நமது நோக்கமே வேறாகிவிடுகின்றது. அப்பொழுது நமது அபிவிர்த்தி முற்றிலும் நிச்சயமென நமக்குப் புலப்படும். ஒருவன் தவறினும் சரியே, முன்னேற்றத்திற்கு விரோதமாய்ச் சென்றாலும் சரியே, அவ்விதம் விரோதமாய் நடப்பதால் பலவாறு அடிபட்டு கஷ்டப்படினும் சரியே, அவன் முன்னேற்றத்தை முடிவிலடைவது நிச்சயமே. இவ்வித ஞானம் ஏற்படின் பயம் நிவர்த்தியாகுமென்பதை நாம் பார்க்கின்றோம்.

மரணத்தால் ஏற்படும் நமது பிரியமுள்ளவர்களின் பிரிவு உண்மையில் தாத்காலப் பிரிவேயாகும். நிரந்தரமானதன்று. மேல் லோகங்களைப் பார்க்கக்கூடிய சக்திகள் உண்டாயின் அப்பிரிவுகூட இல்லாது போகும். நாம் யாரை இழந்துவிட்டதாக நினைக்கிறோமோ அவர்களை நமது கண்களால் பார்க்கமுடியாவிடினும் அவர்கள் இன்னும் நமது பக்கத்திலேயே யிருக்கிறார்கள். சிலசமயம் நாம் அவர்களைப் பறிகொடுத்துவிட்டோமென்ற பிராந்தியில் இருந்தாலும் அதை நாம் மறக்கப்படாது. அவர்களுக்கு நம்மை இழந்துவிட்டதான பிராந்தியே யில்லை. ஏனெனில் அவர்கள் நமது புவர்லோக சரீரத்தைப் பார்க்கக்கூடும். நாம் நித்திரையில் ஸ்தூல சரீரத்தை விட்டவுடன் அவர்களுடனிருக்கிறோம். நாம் ஸ்தூல லோகத்தில் இருந்ததுபோலவே அங்கும் அவர்களுடன் கலந்துறவாடலாம்.

நமது ஆத்மாவைக் காப்பாற்ற வேண்டி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனாலோ, ஒரு பிர்ம்மஞ்ஞான கிரந்தகர்த்தா சொல்லியபடி ஏதோ ஒருநாள் நமது ஆத்மா நம்மைக்காப்பாற்றுமென்ற எதிர்பார்த்தலுக்கு முற்றிலும் கடந்து நாம் இல்லாமலிருக்கலாம். ஸாதாரண முறைமையில் வழங்கப்படுகிறபடி காப்பாற்றப்படவேண்டியதற்கு ஆத்மாவேயில்லை. ஏனெனில் நாமே ஆத்மா. நமது சொந்தக்குற்றம் அஞ்ஞானத்தைத் தவிர காப்பாற்றப்பட வேண்டியதாக ஒன்றுமில்லை. சரீரம் கேவலம் ஒரு சட்டையைப் போலொத்தது. அது ஜீரணமாகும் பொழுது அதை நாம் கழற்றி எறிந்து விடுகின்றோம். ஆகையால் மரணத்திற்கு பயப்படவேண்டிய அவசியமில்லை. மேலும் கீதையில் கூறியபடி, பயம் அசுரஸம்பத்தாகும். பயமின்மையே தெய்வீக சம்பத்தாகும். நாம் தெய்வீக சம்பத்துடன் ஜனித்திருப்பதால் பயம் வேண்டுவதில்லை.

V. இராமச்சந்திர நாயுடு.

## குறிப்புகளும் ஸமாசாரங்களும்.

சென்ற டிஸம்பர் மீ 28உ யில் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அடையார் ஆலவிருக்ஷத்தின்கீழ் உபன்யாசம் செய்துகொண்டிருக்கையில் உபன்யாசமுடிவில் ஸ்ரீஜகத்குருவைப்பற்றிப் பேசும் சமயத்தில், திடீரென, தொனி மாறியதும், துவக்கத்தில் "அவர் வரப்போகிறார்" என்னும் சொல் போக்குமாறி "நான் வருகிறேன்" என்று முடிவில் சொன்னதும் இதுகாறும் எல்லோரும் தெரிந்துகொண்டிருக்கும் விஷயமே. அச்சமயத்தில் மஹாப்பிரபுவே அவருக்குள் பிரவேசித்து, அவர் வாய்மூலமாய்த் தான் வரும் ஸமாசாரத்தை பிரத்யக்ஷமாக அளித்தார். அச்சமயம் அங்கு கூடியிருந்த ஜனங்களில் அனேகர்களுக்குப் பலவிதங்களாய் அற்புத தரிசனமாயிற்று. அந்த சுபவார்த்தை உடனே நான்கு திக்குகளிலும் பரவிற்று. நானாதேசங்களுக்கும், கண்டங்களுக்கப்பாலும் வெளிப்பட்டது. ஆனால் நம்பிக்கையில்லாத அனேகர் ஆக்ஷேபிக்கவும் ஆரம்பித்தார்கள். நடந்த ஸமாசாரத்தைத் தப்புவழியில் அர்த்தம் செய்துகொண்டு இல்லாததும் பொல்லாததுமான வதந்திகளைப் பரவச்செய்ய ஆரம்பித்தார்கள். டாக்டர் பெஸண்டம்மையாரவர்கள் "கிருஷ்ணமூர்த்தியே ஜகத்குரு" எனச் சொன்னாரென்பதாக, ஸமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரித்துக்கொண்டும், பரிஹாஸங்கள் செய்துகொண்டும் சிலர் கேலிசெய்ய ஆரம்பித்தார்கள்.

அம்மையாரவர்கள் இந்த துர் அபிப்பிராயங்களை நீக்கி, உண்மையை மிகவும் விபரமாகவும் தெளிவாகவும் எடுத்துத் தெரிவித்தனர்.

ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியவர்கள் ஜகத்குரு அல்லவென்றும், அனேக ஜன்மங்களாக பக்தியை யனுஷ்டித்து மஹாப் பிரபுவின் அனுக்கிரஹத்தை அடையப் பெற்ற சிஷ்யனென்பதாகவும், அக் காரணம்பற்றி ஜகத்குரு மீளவும் உலகத்தை அனுக்கிரஹிக்க நிச்சயித்தபொழுது, இந்த சிஷ்யனுடைய சரீரத்தையே உபயோகித்து, அவருக்குள் பிரவேசித்து, அவர் வாய்மூலமாய் உலகிற்கு புதுயுக ஸமாசாரத்தை யளிப்பாரென்பதாகவும், பிரபு பிரவேசித்திருக்கும் ஸமயங்களில், கிருஷ்ணமூர்த்தியென அறியப்படும் ஜீவன் தன் சரீரத்தைப் பிரபுவின் வாசத்திற்காக அர்ப்பணஞ்செய்து, தான் புறம்பாக இருக்கும் மாதிரி இருப்பார் என்றும், அவ்வித ஆவேசங்கள் ஸர்வ ஸாமான்யங்களென்றும் தெளிவாக

நிரூபித்து, துரபிப்பிராயங்களை நீக்கினர். ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி வேறு, ஜகத்குரு வேறு. கிருஷ்ணமூர்த்தி சிஷ்யர், இன்னும் முக்தரன்று. ஜகத்குருவோ முக்தர், அதிகார புருஷர். பரிசுத்தனும், உலகஸேவை செய்பவனும், அஹங்கார அபிமானத்தை வர்ஜித்தவனும், அநேக ஜன்மங்களாக பிரபுவின் சிஷ்யனும் பக்தனுமாயுள்ள கிருஷ்ணமூர்த்தி, தன் சரீரத்தைக் காலோசிதமாய் பிரபுவுக்குப் பிரவேசத்திற்காக அர்ப்பணஞ்செய்து, தான் பக்கத்திலிருந்து, பிரபுவின்வேலை முடிந்து, அவர் வெளிப்பட்டுச் சென்றதும், தான் தனது சரீரத்தில் பிரவேசிப்பாரென்பதாகவும் ஸ்பஷ்டமாய் அறிதல்வேண்டும். இடைவிடாது ஸகல காலங்களிலும் ஜகத்குருவானவர் கிருஷ்ணமூர்த்தியின் சரீரத்தினிடமாகவே இருப்பாரென எண்ணப்படாது. வேலை நேர்ந்தபொழுது அவர் ஆவேசித்து வேலை செய்வார். மற்றக்காலங்களில் கிருஷ்ணமூர்த்தி தன் சரீரத்தில் வேலைசெய்துகொண்டிருப்பார்.

இவ்வித ஆவேசங்கள் ஹிந்துக்களுக்குப் புதிதன்று. சில மானிடர்கள்—ஸ்திரீகளாகட்டும், புருஷர்களாகட்டும், அவரவர் கெட்ட கர்மாநுஸாரமாய் சில சமயங்களில் சரீரப்பிரக்ஞையில்லாமலிருக்க, இறந்துபோன ஜீவர்கள் பிசாச ரூபமாக மேற்கொண்டு ஆவேசிப்பதும், சில தேவாலயங்களில் (க்ஷேத்திரங்களை) ப்பூசிப்பவன்பேரில் தேவதை ஆவேசமாகிப் பேசுவதும் மிகவும் ஸாதாரணமன்றோ! ஆனால் இந்த ஸந்தர்ப்பங்களில் பிசாசு பிடித்த, அல்லது தேவதை ஆவேசித்த மனிதன் ஸ்வதந்தரனையில்லாமல், பலவந்தமாய் சரீரத்தினின்று விரட்டி வெளியேற்றப்பட்டு, வெளிப்படையான சக்தி ஆவேசிக்கும். அந்த சக்தி—பிசாசோ அல்லது தேவதையோ—விலகிப்போன பின்னர், ஜீவன் சரீரத்தில் பிரவேசிக்கவே நித்திரையினின்று விழித்துக்கொண்டதுபோலாகுமேயொழிய, ஆவேசகாலத்தில் நிகழ்ந்த அனுபவம் அந்த ஜீவனுக்குத் தெரியவேமாட்டாது. ஸ்தூலசரீரம் கூட மிகவும் துர்பலமாயிருக்கும்.

பரிசுத்தனான சிஷ்யனது சரீரத்தைப் பரம குருக்களுக்கு அர்ப்பணம் செய்யும்பொழுது, சிஷ்யன் பூரண ஞானத்துடனிருந்து, ஸ்வச்சமாய், மனப்பூர்த்தியாய் தன் சரீரத்தை அவருக்கு அர்ப்பணஞ்செய்து, தான் ஆனந்தத்தோடு, தன் ஸூக்ஷ்ம சரீரத்



துடன் பக்கத்தில் தங்கியிருந்து, பிரபு வசனிக்கும் வாக்குகளையும், செய்யும் வேலைகளையும் நன்றாய் கிரஹித்து, பிரபுவிட்டுப் போன பின்னர் பூரணப் பிரக்ஞையோடு, தன் சரீரத்தில் பிரவேசிப்பான். சரீரத்திற்குக் கிஞ்சிற்றேனும் துர்பலம் உண்டாகாமல் போவதுமன்றிப், பரமனதுஸ்பர்சமாத்திரத்தால் தன் சரீரத்திற்கு விசேஷபலமும் தேஜஸும் உண்டாகும். ஆரம்பத்தில் சில காலங்கள் வரைக்கும் மஹாப்பிரபு ஆவேசம் செய்யும்பொழுது மஹானுடைய ஜோதி சலனங்களை சிஷ்யனது சரீரம் பூரணமாய்த் தாங்கமாட்டாமல் கொஞ்சம் சிரமப்படக்கூடும். ஆனாலும் சிறிது காலங்களில் அச்சரீரத்திற்கு அச்சலனங்களின் பழக்கமேற்பட்டு ஸஹஜமாகும். அத்துடன் ஒவ்வொரு ஆவேசசமயமும், அச்சரீரத்திற்கு விசேஷபலத்தையும் சாந்தியையும் அளிக்கும்.

இவ்விஷயத்தைப் படிப்பவர்கள் நன்றாய் மனனஞ்செய்து கிரஹிக்கவேண்டும். மேலும் தாரகோதய ரகசியங்களை தமிழ்நாடுகளில் வெளிப்படுத்துவதற்கும், இவ்விஷயத்தில் பிரஜைகளின் மனோபாவங்களை ஸரியானவழியில் விகஸிக்கப் பண்ணுவதற்கும், சமுசயங்களையும் துரபிப்பிராயங்களையும் நீக்குவதற்கும் எல்லோரும் முயற்சிப்பார்களாக.

திவ்யஞான தீபிகை.

... ... ... ...

ஸ்ரீமான் ஜெ. கிருஷ்ணஜி, தே. ராஜகோபாலாசாரியார், யதுநந்தன் பிரசாது சென்ற ஜூன் மாதம் நடுவில் லண்டனை விட்டு ஆகாய விமானத்தின்மேல் பறந்து பாரீசு நகரை அடைந்து அங்கிருந்து ரயில்மார்க்கமாக சுவிட்ஜர்லெண்டு தேசமடைந்து ஆல்ப்ஸ் மலையில் 4000 அடி உயரத்தில் உள்ள சுற்றிப் பதினைந்து மைல் தூரம்வரை ஜனசஞ்சாரமில்லாத ஒரு சிறு மரக்குடிசையில் பதினைந்து நாள் தங்கிக் கோடையைக் கழித்தனர். அங்கு மாடுகள் கழுத்தில் கட்டியுள்ள மணியோசை இரவும் பகலும் விடாது இனிய ஓசை செய்கிறதாம். வெள்ளைப் பனிக்கட்டிமூடிய பர்வதத்தின்மேல் சூரியன் ஒளி வீசுவது கண்ணைக் கவருகிறதாம். ஆகாய விமான சவாரி ஆரம்பத்தில் விமானம் எழும்பி இறங்கி எழுவது புதிதாகச் செல்லுபவர்களுக்கு ஆச்சரியத்தையும் நடுக்கத்தையும் கொடுக்கிறதாம். 4000 அடி உயரத்துக்கு உயர்ந்தபின் ஆடாமல்

அசையாமல் விமானம் செல்லுகிறதாம். உலகம் ஒழிந்து கடல் கண்ணுக்கு மறைந்து மணிக்கு நூறு மைல் வீதம் பறந்த ஆச்சரியம் நமது நாரதத் தேசப் பிரதிநிதி ஸ்ரீமான் யதுநந்தன் பிரசாது கடிதத்திலிருந்து காண்கிறது. (புதுயுகம்.)

... ... ... ...

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார், ஸ்ரீமான் ஜெ. கிருஷ்ண மூர்த்தி, ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் இம்மூவரும் சென்ற ஆகஸ்டு மீ 18௳ இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு அமெரிக்காவுக்குப் பிரயாணமாயினர்.

... ... ... ...

எனக்குடியில் ஸ்ரீ கிருஷ்ணாசிரமம் என்ற பிரம்மஞானக் கிளைச்சபைக்கு அதன் பிரஸிடெண்டான ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் ஏற்கனவே ஓர் சிறந்த கட்டடம் நிர்மாணம் செய்யப்பட்டிருப்பது பிரம்மஞானஸபை மெம்பர்கள் அறிந்த விஷயம். அக்கட்டடமும் வருஷமொன்றுக்கு சுமார் ரூ 400 முதல் ரூ 500 வரையில் வருமானம் வரக்கூடிய நஞ்சை நிலம் சுமார் 13 ஏகராவும் இப்பொழுது ஸ்ரீமான் நாயுடு அவர்களால் பிரம்மஞான மஹாஸபைக்கு, இந்தியன் ஸெக்ஷன் ஜெனரல் செக்ரெடரி அவர்கள் பேருக்கு, இனும் சாஸனமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வருமானம் அங்குள்ள புஸ்தகாலயத்தை விருத்திசெய்வதற்கும், வருஷமொருமுறை பிரம்மஞான கான்பரென்ஸ் நடத்துவதற்கும் இன்னும் அதைச்சார்ந்த வேறுகாரியங்களுக்கும் உபயோகமாகும்.

## பத்திரிகை வரவு.

(1) சென்னை 302 - நம்பர் தங்கசாலைத் தெருவில் ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியார் அவர்களால் நடத்தப்படும் ஆநந்தகுணபோதினி. இது அழகிய ஓர் செந்தமிழ் மாதாந்தப் பத்திரிகை. பல அரிய விஷயங்கள் அடங்கியது. வருஷ சந்தா ரூ ஒன்று தான்.

(2) புதுவைமாநகரினின்றும் வெளிவரும் கற்பகம்.

வருஷ சந்தா ரூபா ஒன்றுதான்.

(3) திரிசிரபுரத்தினின்று வெளிவரும் நச்சினார்க்கினியன். இதன் ஆசிரியர், பண்டிதர் ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள்.

வருஷ சந்தா ரூபா—2.

மேற்கண்ட 3 பத்திரிகைகளும் நம் தமிழ் அபிமானிகள் அனைவரும் விருப்பத்துடன் வாங்கிப் படிக்கத் தகுந்தவை என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.



62. 𑌨 𑌤𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑍌 𑌲𑍋𑌕𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍋 𑌹𑍇𑌯𑌃
𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌂 𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍇𑌵 ॥

அது ஸித்திக்காவிடில், லோக வியவஹாரத்தை ஒழிப்பது தகாது. ஆனால் பலனைக்கருதாமல் காரியங்களை யவசியம் செய்தே தீரவேண்டும். அதுதான் அதற்கு சாதனம்.

63. 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌧𑌨𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌚𑌰𑌿𑌤𑍍𑌰𑌂 𑌨 𑌶𑍍𑌰𑌵𑌣𑍀𑌯𑌮𑍍 ॥

ஸ்திரீயைப் பற்றியாவது, பொருளைப்பற்றியாவது நாஸ்திகனைப்பற்றியாவதுள்ள சரித்திரங்களை கேட்கலாகாது.

64. 𑌅𑌭𑌿𑌮𑌾𑌨𑌦𑌮𑍍𑌭𑌾𑌦𑌿𑌕𑌂 𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌮𑍍 ॥

அஹங்காரம், டம்பம் இவைகளை ஒழிக்கவேண்டும்.

2/10807

65. 𑌤𑌦𑌰𑍍𑌪𑌿𑌤𑌾𑌖𑌿𑌲𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸𑌨𑍍 𑌕𑌾𑌮
𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑌰𑌣𑍀𑌯𑌮𑍍 ॥

(நமது) ஆசாரனை யெல்லாவற்றையும் பகவானுக்கர்ப்பணம்செய்து, காம, க்ரோத அபிமானங்களும் பகவானுக்கர்ப்பணமாகும்படி செய்யவேண்டும்.

குறிப்பு:—பகவானுக்குப் பிரீதியான விஷயம் ஒன்று உண்டு. பரோபகாரம் அவருக்கு பிரீதி. பிறரை ஹிம்சிப்பது அவருக்கு அப்ரியம். பரோபகாரமான கைங்கரியம் ஏதாவதொன்றை யெடுத்துக்கொண்டு, அதன் நிமித்தமாகவே நமது ஸகல ஆசாரங்களையும் கைக்கொள்வோம். அப்போது நமது காமக்குரோத அபிமானங்கள் யாவும் நம்மை சொற்பமே பந்தப்படுத்தும். கடைசியில் அவைகள் புனிதப்பட்டுப்போகின்றன.

66. 𑌤𑍍𑌰𑌿𑌰𑍂𑌪𑌭𑌙𑍍𑌗𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌦𑌾𑌸𑍍𑌯
𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌭𑌜𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌪𑍍𑌰𑍇𑌮
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌮𑍈𑌵 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍 ॥

பிரேமை, பிரேமை செலுத்தும் பொருள், பிரேமை செலுத்தப்படும் பொருள் ஆகிய மூன்றும் அற்ற நிலையான பக்தியை நாடவேண்டும். அதாவது ஈசனுக்கு என்றென்றைக்கும் நாயகியாகவும், என்றென்றைக்கும் தாஸனுகவுமிருக்கவேண்டிய அன்பைக் கடைப்பிடிக்கவேண்டும்.

குறிப்பு:—கோபிகைகளுடைய பிரேமையானது த்ரிபுடியற்றதாகவே யிருந்தது. [illegible] என்ற கிருஷ்ணகர்ணாம்ருத சுலோகத்தின் பிரகாரம் தயிர் விற்கப் புறப்பட்ட கோபிகைகள் "தயிரோ, தயிர்" என்று கூவிவிட வேண்டியதிருக்க, "ஹே! கோவிந்த, ஹே! தாமோதர, ஹே! மாதவா" என்று தெருவீதியில் சொல்லிக்கொண்டு போனார்களாம். இது த்ரிபுடியற்ற சித்த ஏகாக்ரதையைக் குறிக்கவே சொல்லப்பட்டதாகும்.

67. பக்தா ஏகாந்தினோ முக்யா:

முக்கியமான பக்தர்களனைவோரும் ஓரே முடிவை நோக்கியவர்கள்.

குறிப்பு:-பகவானுடைய சங்கல்பம் இன்னதென்றறிந்து அதைச்செய்வதுதான் பக்தர்களுடைய ஓரே நோக்கம். இதற்கு லக்ஷியமாக பிரஹ்மஞான ஸபையைச் சொல்லலாம். நாநா ஜாதி மதஸ்தர்கள் நாநாவித ஆசாரங்களையுடையவர்களாயிருப்பினும் ஓரே நோக்கத்தை மேற்கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

68. கண்டாவரோத ரோமாஞ்சாச்ருபி:
பரஸ்பரம் லபமானா: பாவயந்தி
குலானி ப்ருதிவீம் ச ॥

(பக்தர்கள் பக்தியின் மேலீட்டால்) நெஞ்சடைக்க, மயிர் சிலிர்க்க, ஆனந்தக்கண்ணீர் பெருக, ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தங்கள் குலங்களையும், பூலோகத்தையும் பரிசுத்தப் படுத்துகிறார்கள்.



குறிப்பு:—முன் ஒரு காலத்தில் நாரதபகவான் அருளிய இவ்விஷயங்கள் யாவும் தற்காலத்தில் பிரஹ்மஞான ஸபைக்கே பொருந்தியிருக்கின்றன. பிரஹ்மஞான கான்பிரன்ஸ்கள் அநேகம் நடக்கின்றன. ஓரே நோக்கமுடைய முக்கியமான பக்தர்கள் எல்லோரும் ஒருங்கே கூடுகிறார்கள். பரமார்த்த விஷயங்களை யோசிக்கும்போது, மெய்சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர் பெருக்குகிறார்கள். அவர்கள்தான் தங்கள் குலத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளக் கூடும். ஒவ்வொரு குடும்பத்திலும் நானாவிதமான பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரங்களையுடைய ஜீவர்கள் ஒருங்குசேர்ந்து வாழவேண்டியிருக்கிறது. குடும்பத்தை நேர்மையாய் அழகுற நடத்துவதற்கு அன்பே அவசியம். அவர்களால்தான் பூலோகமும் உஜ்ஜீவிக்கிறது. அவர்களுடைய அன்புமயமான சிந்தனைகள் பூலோக முழுவதிலும் நல்ல ஸம்ஸ்காரத்தை உண்டாக்குவதோடு, அவர்கள் தமது பக்தியை கிரியாரூபமாகவும் லோகோபகாரமான காரியங்களநேகத்தைச் செய்கிறார்கள். முதலாவது ஜனங்களுக்குள் ஸமாதானத்தையும் நல்லெண்ணத்தையும், அறிவையும் புஸ்தகங்கள், பத்திரிகைகள், உபந்யாசங்கள் வாயிலாகவும் பரவச்செய்கிறார்கள். ஈசுவரபக்தியையும், மனிதனிடத்து பக்தியையும் உலக முழுவதும் வியாபிக்கச்செய்கிறார்கள். தற்காலத்தில் இவர்களால்தான் பூலோகம் பாவனமாகின்றது என்பதில் என்ன பிழை?

69, தீர்த்தீகுர்வந்தி தீர்த்தானி ஸுகர்மீகுர்வந்தி
கர்மாணி ஸச்சாஸ்த்ரீகுர்வந்தி சாஸ்த்ராணி ॥

தீர்த்தங்களுக்குப் புண்யம் ஏற்படுவது இவர்களால்தான், கர்மங்களை நற்கருமங்களாக்குபவர்கள் இவர்கள்தான், சாஸ்திரங்களை நல்ல சாஸ்திரங்களாக்குபவர்கள் இவர்கள்தான்.

குறிப்பு:—தற்காலத்தில் புண்ணியக்ஷேத்திரங்களிலெல்லாம் சிலரும் ஆசாரமுமுள்ள மனிதர்கள் சொற்பம் பேர் தான் இருக்கிறார். வைதிக கருமங்களும், பூஜாதி கிரியைகளும் கருத்திழந்த மூடபக்தியால் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. சாஸ்திரங்களெல்லாம் ஒரு சார்பான குடிலமான வழிகளில் அர்த்தம் செய்யப்படுகின்றன. நம் தேசத்தில் இவைகளை யெல்லாம் தைர்யமாய் சீர்திருத்த ஆரம்பித்திருக்கிறவர்கள் பிரஹ்மஞான சபையோர்களே. காசி க்ஷேத்திரத்தில் ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜை தாபித்து அனிபெஸன்டம்மையார் ஹிந்துமதத்தை வளர்த்தார்கள். சிராத்தம், விவாஹம் முதலிய கிரியைகளை அர்த்தத்தோடு எப்படிச் செய்ய வேண்டும் என்பதை விளக்கிக் கூறியிருக்கிறார்கள். பிரஹ்மசரியம், ஸந்யாஸம் இவ்விரு தர்மங்களையும் பிரஹ்மஜ்ஞான சிக்ஷண ஸபையின் மூலமாகவும் ஸேவாதுரந்தரர்களான "Brothers of Service" சங்கத்தின் மூலமாகவும் பரிபாலித்து வருகிறார்கள். குடத்துள் வைக்கப்பட்ட விளக்கு போல் இருந்த அநேக ஹிந்து சாஸ்திரங்களையெல்லாம் உலகத்தோருக்குப் பயன்படச்செய்தது பிரஹ்மஞான ஸபையே. நம் தேசத்தில் வேதாந்தத்தையும், கர்மத்தையும்பற்றி தவறாக அர்த்தம் பண்ணினமையால் லோகோபகாரமான கைங்கரியங்களைச் செய்யவேண்டும் என்ற நோக்கமே அழிந்துவிட்டது. எல்லாம் விதியின் பயன் என்று தலைமேல் கை வைத்துக்கொண்டு சோம்பலாளிகளா யிருந்தார்கள். மற்றும் சிலர் ஹிந்து சாஸ்திரங்களெல்லாம் வெறும் கட்டுக்கதைகள் என்று கிறிஸ்தவ பாதிரிகள் சொல்லக்கேட்டு அதை நம்பி யிருந்தார்கள். இச்சமயத்தில் மாதுஸ்ரீ பிளவாட்ஸ்கி அம்மாளும், கர்னல் ஆல்காட்டும் நம்தேசமெங்கும் பிரஹ்மஞான விஷயமான பிரஸங்கங்களைச் செய்தார்கள். மஹரிஷிகள் இருக்கிறார்கள். அவர்களையடையும் வழி உள்ளது என்பதை பகிரங்கமாய்க் கோஷித்தார்கள். மஹாத்மாக்களின் யோகவித்தையானது, பௌதிக ரஸாயன சாஸ்திரங்களைவிட எத்தனையோ மடங்கு மேலானது என்பதையும் அறிவுறுத்தினார்கள். அதன்மேல் தங்கள் தேசத்திற்கும் மதத்திற்கும் ஓர் வித அபிமானம் ஹிந்துக்களுக்கேற்பட்டது. மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மாள் பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து லக்ஷக்கணக்கான பிரதிகளை உலகமுழுவதும் பிரசுரத்திருக்கிறார்.



70. தந்மயா:॥

பகவானுடைய ஸ்வரூபமாகவே யிருக்கிறார்கள்.

71. மோதந்தே பிதரோ ந்ருத்யந்தி
தேவதா: ஸநாதா சேயம் பூர்பவதி ॥

பித்துருக்கள் ஆனந்திக்கிறார்கள், தேவதைகள் நர்த்தனம் செய்கிறார்கள். இப்பூலோகம் நாதர்களை யுடையதாகின்றது.

குறிப்பு:—இத்தகைய பக்தர்களால் தான் உலகம் ஸம்ரக்ஷிக்கப்படுகிறது. எல்லோரும் தத்தம் சொந்த க்ஷேமத்தைக் கருதியும், தத்தம் குடும்பக்ஷேமத்தை கருதியும் உழைக்கிறார்கள். உலக க்ஷேமத்தைக் கவனிப்பவர் ஒருவருமே யில்லை. மஹான்கள் தான் பூலோகத்தை உஜ்ஜீவிக்கச் செய்கிறார்கள். இம் மகான்களின் தூண்டுதலால்தான் பிரஹ்மஞானசபை உலகில் ஏற்பட்டது. இவர்கள் இன்னும் இச்சபையைத் தாங்குவதால்தான் அது நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைகிறது.

72. நாஸ்தி தேஷு ஜாதிவித்யாரூபகுலதந
க்ரியாதிபேத:॥

அவர்களுக்குள் ஜாதி, வித்தை, ரூபம், குலம், தனம் தொழில்-இவைகள் பற்றிய பேதபுத்தி கிடையாது.

குறிப்பு:—பிரஹ்மஞான சபையோர்களுக்குள்ளேயும் இவைபற்றிய பேதம் இல்லை. எல்லோரும் ஸகோதரர்களாகவே யிருக்கிறார்கள்.

73. 𑌯𑌤𑌸𑍍𑌤𑌦𑍀𑌯𑌾𑌃।

(ஏனென்றால்) எல்லோரும் கடவுளிடத்திலிருந்து இங்கு வந்தவர்கள்.

74. 𑌵𑌾𑌦𑍋 𑌨𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑍍𑌯𑌃।

(பக்தர்கள் பயனற்ற) தர்க்கத்தைச் செய்யலாகாது.

குறிப்பு:-ஈசுவரனுடைய குணகணங்களைப்பற்றியாவது, நாம் நம் தற்கால்த்துப் பக்குவ நிலையில் விசாரிக்கவேண்டாத அகோசரமான விஷயத்தையாவது விவகரிப்பதில் தலையிட்டு விருதா கண்டோக்ஷேபம் செய்துகொள்ளல்வேண்டாம்.

75. 𑌬𑌾𑌹𑍁𑌲𑍍𑌯𑌾𑌵𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑌿𑌯𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚॥

(அத்தகைய விவகாரத்திற்கு) எல்லையில்லாத காலம் பிடிக்குமாகையாலும். (அப்போதும்) தத்துவத்தைத் தெளிவுறத்தெரிந்துகொள்ளமுடியும் என்ற நிச்சயம் இன்மையாலும்.

குறிப்பு:—பக்தன் தன் உள்ளுணர்வைப் பழக்கி ஒற்றுமையை நாடுகிறான். அப்படிப்பட்டவன் மநத்தத்துவத்திற்கு ஆஸ்பதமான இருமைகளில் சஞ்சரிக்குமனவும் ஒற்றுமையை நாடுதல் அஸாத்தியம் என்பதைக் கண்டுகொள்வானாக.

76. 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑌨𑌨𑍀𑌯𑌾𑌨𑌿 𑌤𑌦𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑌕
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑌰𑌣𑍀𑌯𑌾𑌨𑌿॥

பக்தி சாஸ்திரங்களைப் படித்து மநநம் செய்தலும், அவற்றில் சொல்லப்படும் காரியங்களைச் செய்தலும் வேண்டும்.

77. 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇𑌚𑍍𑌛𑌾𑌲𑌾𑌭𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍇 𑌕𑌾𑌲𑍇
𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍇 𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌮𑌪𑌿 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌨
𑌨𑍇𑌯𑌮𑍍॥



ஸுகம், துக்கம், இச்சை லாபம் முதலியவற்றிலெல்லாம் செலவழிந்த காலத்தை நீக்கி ஒழிந்த வேளைகளிலேயே ஈச்வர தியானம் சாத்தியமாதலால் அரைக்கணமும் வியர்த்தமாக்கலாகாது.

குறிப்பு.—பக்தன் தன்னை முற்றும் பகவானுக்கு ஒப்படைக்கின்றவனாகையால், தன் காலமனைத்தையும் பகவத் காரியத்திற்கு நிவேதனம் செய்வான், அப்போது வீண்காலம் போக்க இடமிராது.

78. 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌸𑌤𑍍𑌯𑌶𑍌𑌚𑌦𑌯𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌾𑌦𑌿
𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑍀𑌯𑌾𑌨𑌿॥

(பக்தர்கள்) அஹிம்சை, ஸத்யம், சுத்தம், தயை, ஆஸ்திக்யம், இத்தனை நற்குணங்களையும் (திரிகரண பூர்வமாகவும் அநுஸரித்து) பரிபாலித்தல் வேண்டும்.

79. 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌿𑌤𑍈𑌃
𑌭𑌗𑌵𑌾𑌨𑍇𑌵 𑌭𑌜𑌨𑍀𑌯𑌃॥

முழுமனதோடும் பகவானையே எப்போதும் நம்பி அவரையே பஜித்தல் வேண்டும்.

80. 𑌸 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑍇𑌵𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿
𑌅𑌨𑍁𑌭𑌾𑌵𑌯𑌤𑌿 𑌚 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍍॥

நாமஸ்மரணம் செய்த மாத்திரமே, அவர் உடனே ஆவிர்ப்பவித்துப் பக்தர்களுக்குத் தம் அருளைக்கொடுக்கிறார்.

81. 𑌤𑍍𑌰𑌿𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌗𑌰𑍀𑌯𑌸𑍀।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌗𑌰𑍀𑌯𑌸𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌗𑌰𑍀𑌯𑌸𑍀॥

முக்காலத்திலும் பக்தியே பெரிது, பக்தியே பெரிது, பக்தியே பெரிது.

குறிப்பு:—எக்காலத்தும் லோக குருக்கள் அவதரித்துத் தம் அருள் வெள்ளத்தால் உலகினர்கு பக்தி, ஞானவைராக்யங்களைப் புகட்டுகின்றனர். ஆனால் மநுஷ்ய கோடிகள், மாறிவரும் காலஸ்வபாவத்திற் கேற்க, அவர்கள் அருளிய உபதேசங்களைப் பயன் படுத்திக்கொள்ள அறியாமலிருக்கின்றனர்.

பக்தி என்பது பஜனை மடத்தில் மட்டும் ஆலயத்தில் மட்டும் அநுசரிக்கப் படாமல், உலகெங்கும் எல்லோராலும அநுஸரிக்கப்படுமாயின், நாம் இப்பூலோகத்திலேயே முக்தி அடைதலாகும். யாவரும் சேர்ந்து முக்தி அடைதலுமாகும்.

சற்று ஆலோசிப்போம். நம் குடும்பங்களில் சச்சரவு ஏன்? சண்டைகளும் கொலைகளும் நடப்பானேன்? கோர்ட்டுக்கும் ஏராளமான பணச்செலவும் ஏன்? அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதேன்? கூலிக்காரர்களுக்கு விசிராந்திக்கும் இடந்தராமல் வேலை வாங்கி அற்பக்கூலிகொடுப்பது எதனால்? தரித்திரர்களுடைய ஏழைத்தனத்தைக் கவனியாமல் அநியாயவட்டிக்குக் கடன் கொடுத்து அவர்களை அமிழ்த்துவதேன்? கன்யா சுல்கம், வரசுல்கம் ஏன்? ஹிந்து முகம்மதியச் சண்டை ஏன்? இத்தகைய் ஓர் ஆயிரம் கேள்விகளுக்கும் விடை என்ன? அன்பு இன்மை அன்பு என்பதும் பக்தி என்பதும் ஒன்றே.

அன்பெனும் பிடியுளகப்படு மலையே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனுங் கரத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளிர் அறிவே
அன்பெனு மணுவு ளமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே.

என்று திருவருட் பிரகாசவள்ளலார் எழுதிய பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது.



82. குணமாஹாத்ம்யாஸக்தி ரூபாஸக்தி
பூஜாஸக்தி ஸ்மரணாஸக்தி தாஸ்யாஸக்தி
ஸக்யாஸக்தி வாத்ஸல்யாஸக்தி காந்தாஸக்தி
ஆத்மநிவேதநாஸக்தி தந்மயதாஸக்தி பரம
விரஹாஸக்தி ரூபா ஏகதாப்யேகாதஶதா பவதி ॥

பகவானுடைய குணத்தின் பெருமையையறிந்து ஆநந்தித்தல், பகவானுடைய ரூபத்தைக் கண்டு அதில் ஆனந்தித்தல், அவரைப் பூஜிப்பதில் பற்றுதல், அவரை நினைப்பதில் பற்றுதல், அவருக்குத் தொண்டு செய்வதில் பற்றுதல், அவர் உறவை விரும்புதல், அவருடைய குழந்தையாயிருக்க விரும்புதல், அவருக்கு நாயகியாக பாவித்து பக்தி செய்தல், தன்னையே அர்ப்பணம் செய்வதில் பற்றுதல், எங்கும் ஈசுவரஸ்வரூபமாகவே நினைத்து பக்திசெய்தல், பரமவைராக்கியமான பக்தி ஆகிய பதினொரு விதங்களாக பக்தி நிகழ்கிறது.

குறிப்பு:—ஸத்குண சீலர்களை மரியாதை செய்யுமிடத்து பகவானை மரியாதை செய்கிறோம். அழகான ரூபங்கள் யாவும் பகவானுடைய ரூபங்களே. யார் செய்யும் பூஜையானாலும் அதில் பக்திகொண்டு நம் அன்பையும் அதில் பெருக்கலாம். பெரியோர்கட்கு தாஸனாக இருந்து உழைக்கவும், நம் வேலைக்காரர்களை அன்பாய் நடத்தவும், நம் நண்பர்களையும், குழந்தைகளையும், மனைவியையும், தன்னையும், இன்னும் ஸகல பிராணிகளையும் ஈசுவர ஸ்வரூபங்களாகவே நினைத்து நடக்கவும் பழகுவோமானால், நமது பக்தி பரிபூரணமாதல் எளிதாகும்.

83. இத்யேவம் வதந்தி ஜநஜல்ப நிர்பயா:
ஏகமதா: குமாரவ்யாஸ ஶுகஶாண்டில்ய
கர்கவிஷ்ணு கௌண்டிந்ய ஶேஷோத்தவாருணி
பலிஹநுமத்விபீஷணாதயோ பக்த்யாசார்யா:॥

குமாரர், வியாஸர், சுகர், சாண்டில்யர், கர்கர், விஷ்ணு, கௌண்டிந்யர், சேஷர், உத்தவர், ஆருணி, பலி, ஹநுமான்,

விபீஷணர் முதலியவர்கள் பக்தி என்னும் ஒரே மதத்தின் ஆசார்ய புருஷர்கள். ஜனங்களின் பிதற்றலைக்கேட்டு அஞ்சாதவர்கள்.

குறிப்பு:—உலக விகாஸத்தை நடத்திவரும் மஹா புருஷர்களுக்குள் குமாரர் தான் அரசன். இப்பூலோகத்தார் பற்பல நாமரூபங்களைக்கொண்டு செய்யும் கடவுள் வழிபாடுயாவும் அவரையே சேரும். இவருடைய மரபில் வியாஸ*மங்வாதிகள் உளர். உலகில் தர்மம் குன்றி அதர்மம் ஏற்றம் பெறும் காலத்தில் இம்மஹரிஷி மண்டலத்தினின்று ஒருவர் தோன்றி ஜனங்களுக்கு ஞானத்தை ஊட்டி, பக்தியைப் புகட்டி, அவர்களை நல்வழிப்படுத்துகின்றனர். மதங்களுக்கெல்லாம் தலைவராயிருக்கும் பிரபுவானவர் அவதரித்து விட்டார் என்று சொல்லுதல் பிழையாகாது. நாம் நம் சுபாவத்தில் அன்பை விருத்திசெய்து வருவோமாயின் அதே அவரை வழிபடுதலாம். அவருடன் பல பெரியோர்களும் உழைப்பார்கள். அவர்கள் நிர்ப்பயமாய்த் தமது கருத்தை நிறைவேற்ற வருவார்கள். ஈசுவர ஸங்கல்பத்தை நிறைவேற்றுவதன்றி வேறு கருத்து அவர்களுக்கில்லை. அப்போது ஜனங்கள் உத்தரவாதமுணராமல் கண்டது கேட்டதைப் பிதற்றுவார்கள். ஆயினும் அவர்கள் இவற்றை லக்ஷியம் செய்வதில்லை.

84. 𑌯 𑌇𑌦𑌂 𑌨𑌾𑌰𑌦𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂
𑌶𑌿𑌵𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌿
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌭𑌵𑌤𑌿
𑌸 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌸 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂
𑌲𑌭𑌤 𑌇𑌤𑌿 ॥

நாரதரால் சொல்லப்பட்ட, இந்த மங்களகரமான சாஸ்திரத்தில் யாருக்கு சிரத்தையும் விசுவாஸமும் உண்டாகிறதோ அவன் பக்திமானாவான். தன்னுடைய பரம ஆப்த வஸ்துவை அடைவான்.

210807
தமிழ்நாடு

ஓம்.

அப்பர் வருகின்றானென் றறையப்பா முரசு.
அம்பலக் கோணுண்டாமென் றறையப்பா முரசு.

# புதுயுகம்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

வருஷ சந்தா தபாற்கூலியுட்பட ரூ. 1—8—0.

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் "ஐயன்வருந்தருண மிது ஐயன்மீரேகண்டீர்!" என்று தென்னாட்டில் முரசறைந்தும் அதைநாம் கேளாததால் உருமறைந்தார். அவர் சீஷர் தொழுவூர் வேலாயுத முதலியார் தன்னிடம் பின்வருமாறு கூறியதாக 1882௵ தில் வெளியிட்டிருக்கிறார்:—

"இச்சமரசவேத ஸன்மார்க்க சங்கத்தில் நீங்கள் சேர அருகரல்லர். இதற்கு உண்மையான அங்கத்தினர்கள் இந்தியாவுக்கும் வடக்கே வெகுதூரத்தில் வசித்து வருகிறார்கள். நான் சொல்வதைக் கேட்கிறீர்களில்லை. * * ருஷியா, அமெரிக்காவிலிருந்தும் அந்நிய நாடுகளிலிருந்தும் ஜனங்கள்வந்து இதேஸர்வஜீவ சோதரத்துவத்தை வற்புறுத்திச் சொல்லுங்காலம் சமீபித்துவிட்டது. * வடக்கேயுள்ள அச்சோதரர்கள் சீக்கிரம் இந்தியாவில் அநேக அற்புதங்களைச் செய்வதைக் காண்பீர்கள். அவற்றால் நம் நாட்டிற்கு எண்ணிறந்த நன்மைகளுண்டாகும். இவ்விதம் இப்போது நிகழ்வதை இப்பத்திரிகை மூலமாக அறியலாம். மற்ற அரிய விஷயங்களும் உளது.

கிடைக்குமிடம்:—பத்திராதிபர், 3 கெ. வீடு முகமது அப்துல்லா சாயபு தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

---

# ரூ. 150 முதல் 500 வரை

## மாதம் சம்பாதிக்கலாம்!

எந்த வேலை செய்வது? எந்தவிதமாக சம்பாதிப்பது? என்பதாக **இனி கவலைவேண்டாம்!** ஓழிந்த நேரங்களில் வேலை செய்து நாள் 1-க்கு குறைந்தது ரூ. 3 முதல் 15 வரை சம்பாதிப்பதற்குத் தகுந்த அனுபவ கைத்தொழில் முறைகளையும், புதிது புதிதான யோஜனைகளையும், மாதந்தோறும் போதித்துவரும், "தொழிலாசிரியன்" என்னும் மாதாந்தத் தமிழ் சஞ்சிகைக்கு இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்!

**இதன் வருட சந்தா ரூ. 2—0—0 தான்!**

4 அணா தபால் முத்திரையுடன் மாதிரிக் காப்பிக்கு எழுதுங்கள்!

மனேஜர்:—"தொழிலாசிரியன்" ஆபீஸ்,
சிவகங்கை, S. I.

# "தியஸாபிகல் ஸொஸைட்டி"

என்னும்

# பிரம்மஞான ஸபை.

இஃது 1875-ஹு நவம்பர்-மீ 17வ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டு, சென்னை அடையாற்றில் இப்போது நிலைபெற்றிருக்கிறது. ஸமரஸ புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருகிறவர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து, ஆஸ்திக புத்தியை வளர்த்து, மனித வர்க்கத்திற்கு ஞானவழியில் உபகரிப்பவராவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப் பேதங்களின்றி, ஸர்வஜன ஸகோதர பாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவ சாஸ்திரம், பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத் தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவராத பிரபஞ்ச நியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

இச்சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தினராகவும் அல்லது ஒரு மதத்தையும் சேராதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற்கண்ட நோக்கங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். மதத் துவேஷங்களை ஒழித்து நல்லெண்ணமுள்ளவர்களாயிருந்துகொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்துகொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமன்று. தத்துவத்தைக் கண்டறியும் ஒரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பதுதான் காரணம்.

ஓம் தத் ஸத்.